# சிறகு முளைத்த மீன்



Dr. ஜலீலா முஸம்மில்

நூலாசிரியருடன்
தொடர்பு கொள்ள
மேலே உள்ள
QR குறியீட்டினை
பயன்படுத்தவும்

# சிறகு முளைத்த
# மீன்

டாக்டர் *ஜலீலா முஸம்மில்*

**எழிலினி**
**பதிப்பகம்**

**சிறகு முளைத்த மீன்** •ஆசிரியர்: டாக்டர் ஜலீலா முஸம்மில் •© எழிலினி பதிப்பகம், 2022 •முதல் பதிப்பு : 2022 •அளவு: 14x21cm •பக்கம் : 160 •வெளியிடுபவர்: நல்லினி ஒளிவண்ணன், எழிலினி பதிப்பகம், 15ஏ, முதல் மாடி, காசா மேஜர் சாலை, எழும்பூர், சென்னை - 600 008

அச்சிட்டோர் : எஸ் ஆர் எண்டர்பிரைசஸ், சென்னை

**Siraku Mulaitha Meen** •Author: Dr. Jaleela Muzammil • © Ezhilini Pathipagam, 2022 • Language : Tamil • First Print : 2022 • Size: 14x21cm •Pages: 160 •Publisher: Nallini Olivannan, Ezhilini Pathipagam, 15A, First Floor, Casa Major Road, Egmore, Chennai – 600 008

பதிப்புரிமை பெற்றது இந்நூலைப் பதிப்பகத்தாரின் அனுமதியின்றி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வெளியிடக்கூடாது

**வழங்கீடும் விற்பனையும்**
எமரால்டு பதிப்பகம்
15ஏ, முதல் மாடி, காசா மேஜர் சாலை
எழும்பூர், சென்னை - 600 008
தொலைபேசி : 044-2819 3206, 4214 6994
கைப்பேசி : 9840696574

**விலை : ரூ 160.00**

# சமர்ப்பணம்

கலங்கரை விளக்கமாய்
கல்வியின் சிகரமாய்
குன்றில் விளக்காய்
உலகில் எமக்காய்
வாழ்ந்து மறைந்த

**எமது அன்புத் தந்தை மர்ஹூம்**



உதுமாலெப்பை ஹயாத்து முஹம்மத் (SLEAS)
முன்னாள் அதிபர், அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர்.

அவர்களுக்கு அகம் நெகிழ்ந்து
இந்நூல் சமர்ப்பணம்

# அணிந்துரை



தமிழ் இலக்கிய உலகில் சங்க காலம் முதல் இன்றுவரை பாக்கள், செய்யுள்கள் அல்லது கவிதைகள் முக்கிய இடத்தை அபகரித்து வருகின்றன. இலக்கண மரபுடன் கூடிய பாக்களும் செய்யுள்களும் தமிழின் தொன்மை வரலாற்றை இன்றளவும் முன்னெடுத்துச் செல்கின்றன. கடைச்சங்க காலத்திலும் கூடத் தமிழிலே உரைநடையை விட அதிகமாக இலக்கணம், இலக்கியம், கடிதங்கள் (நிருபங்கள்), மருத்துவ நூல்கள் (வாகடங்கள்), நிகண்டுகள் போன்ற அனைத்தும் செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டு வந்துள்ளன.

வெண்பாக்களும் செய்யுள்களும் 19 ஆம் நூற்றாண்டின் பின்னர் தமது இலக்கண மரபுகளைப் புறந்தள்ளிப் பல்வேறு வடிவமெடுத்துப் புதுக்கவிதைகள், நவீனத்துவக் கவிதைகள், வசன கவிதைகள், குறுங்கவிதைகள் எனப் பரிணமித்தபோது ஆயிரமாயிரமாய்க் கவிஞர்கள் தோற்றம் பெற்று இக்கவிதைகளை வாரியிறைத்தனர்.

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு எனும் புகழ் பெற்ற மாவட்டத்தின் ஒரு நகராம் கடலும் கடனீரேரியும் காணத்தக்க ஏறாவூர் நகரில் மீன்கள் சிறகு முளைத்துப் பறக்கும் காலம்

கனிந்தது. சிறகொடிந்த பறவைகள் பல தவித்துக் கிடக்கையிலே... வாழ்விழந்த கோதையர் பலர் வாடிக் கிடக்கையிலே... பாதை தொலைத்த காளையர் பலர் போதையில் கிடக்கையிலே... டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் பார்வையில் பட்ட மீன் சிறகு முளைத்துப் பறப்பது கடந்த அத்தனைக்கும் ஒரு மீட்சியாக அமைந்து விடாதா என்ற ஏக்கமுடன்... இவரின் நூலுக்குள் நுழைகின்றேன்.


புத்தகத்தை உறவாகவும் வாசிப்பை வரமாகவும் நேசித்த டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் முதல் பிரசவமாக வெளிவரும் "சிறகு முளைத்த மீன்" அவரின் தணியாத தமிழ்த் தினவெடுத்தலைப் பகிரங்கப் படுத்திப்பறக்க எத்தனிக்கின்றது.

இறையைப் போற்றி, பூமான் நபியைப் புகழ்ந்து... மாதா, பிதா, குரு, தெய்வம் என இந்நூலைப் படர விட்டுள்ளார்.

கேடுகள் பொறுத்தே
கேடயம் ஆவாள்
கவலை துடைத்துக்
கருணை புரிவாள்... என மாதாவையும்
புத்திமதி சொல்லி எங்களைப்
புடம் போட்டவர் நீங்கள்
வித்தைகள் பல கற்று
வித்தகர் ஆனவர் நீங்கள்... என்று தன் பிதாவையும்

சமூகச் சிகிச்சை செய்யும்
சிறந்த வைத்தியர் நீங்கள்
வெண்கட்டி எடுத்து
அறியாமை யிருளுக்கு
வெள்ளை பூசியவர் நீங்கள்





அள்ள அள்ளக்
குறையாத செல்வமும்
நீங்கள்… என்று குருவையும்

மானிடர் பணிந்து
மனதாரத் தொழுதிட
மகிழ்ந்து எம்மை

மாற்றிடு இறையே… என்று இறையிடம் வேண்டி நூலுக்குள் நம்மை வரவேற்கின்றார்.

முழுக்கவும்
காதலால் நிரம்பி…
உயரப் பறக்கும்
உப்பிய பலூனாக…
சிறகு முளைத்த மீனாக…
நான்…

என் காதலின் விரிகையை அறிந்து கொள்ள வா… மேலே மேலே வா… என்னை ஆசீர்வாதம் பண்ணு… என்று சமுத்திரத்தை இரைந்தழைக்கும் இந்தச் சிறகு முளைத்த மீன்… காலமெலாம் நீரே கதியென ஆழ்ந்து கிடந்த இந்த மீன்… இன்னுமோர் உலகு படைக்க தன்னில் சிறகுகள் புனைந்து பறக்க முனைந்தது மட்டுமன்றி, இத்தனை காலம் தான் சுகித்திருந்த ஆர்ப்பரிக்கும் கடலையும் காதல் வயப்பட்டு தன்னுடன் அழைத்துச்செல்ல விளைவது கண்முன் காட்சியாய் விரிவதுடன்,

நான் உயர உயரப் போகிறேன் நீயும் வா...

நான் மயங்கி மயங்கி சாய்கிறேன் மடியைத் தா... என்ற கவிஞர் வாலியின் வரிகள்பால் நம்மைக் கொஞ்சம் ஈர்ப்பதாவும் உள்ளன.


உறங்காத இரவுகள் என்றோர் கவிதை...
உறவாடும் உனது நினைவுகள்
உரிமையோடு எனைத் துரத்துகிறதே
கனவு மட்டும் காண்பது சரிதானா?
.........
நதியும் ஒருநாள் கடல் சேரும்


நாடி வருவாய் எனை உணர்ந்து... என்று பிரிவினால் உறங்காது தவித்த இரவுகளை உணர்வு பூர்வமாக விபரிக்கின்றார். என்றோ ஒருநாள் நதியும் கடல் சேர்வது போல் பிரிந்த உறவு சேர்ந்து விடும் என்றே நம்புகின்றார்.

இவை போதும் எனக்கு... என்று தனது தன்னிறைவான, அமைதியான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு சில வரையறைகளை வகுத்துக் காண்கிறார் டாக்டர் ஜலீலா.

பிடித்த வேலை...
நீடித்த நட்பு...
நிறையப் புத்தகங்கள்...
திறந்த புல்வெளி...
இன்பக் கனவு...
சிடு சிடுத்த மழை...

மன்னிக்கும் மனம்... இப்படிப் பல சின்னச்சின்ன விடயங்கள்... காசின்றிக் கிடைக்கத் தக்க செல்வங்களை நாடி...





அவையெல்லாம் கிடைத்துவிட்டால் போதும் என்று காட்டும் பாங்கு அவரது எதிர்பார்க்கைகளின் எளிமைதனை எடுத்தியம்புகின்றது.

உழைப்பாளிகளின் வாழ்க்கை அவலங்களைக் காட்டுவதாகப் பல தன்முனைக் கவிதைகள் விரவிக் கிடக்கின்றன.

கடுமையான உழைப்பில்
காய்த்துப் போகின்றன கரங்கள்.
புகழ் மாலைகள் விழுகின்றன
இடை வர்த்தகத் தோளுக்கு

கூலிக்கு வேலை செய்வோர் கற்களையும் மரங்களையும் கையாண்டு கரங்கள் மரத்துப் போயுள்ள நிலையில் ஒப்பந்தக்காரனோ செல்வத்தைத் தனக்குள் நிறைப்பது மட்டுமன்றி, புகழையும் பெற்றுக்கொள்கின்றான். உழைப்பாளிக்கோ அன்றைய தேவைக்கே பற்றாக்குறையான ஊதியத்துடன் அவனது குடும்பம் வாடிக் கிடக்கின்றது.

அதையே இவ்வாறு மறு வடிவம் கொடுத்துள்ளார்.
ஏப்பம் விட்டே
எளிதாக சுவைக்கின்றீர்.
ஏக்கப் பெரு மூச்சில்
ஏழைத் தொழிலாளி குடும்பம்.

அவ்வாறே அவரது ஹைக்கூக்களும் சென்றியுக்களும் பல்வேறு சேதிகள் பகர்கின்றன. அவரது கிராமியப் பாடல்களும் அன்பு, பாசம், காதல் என்று பல்வேறு சுவைகளை ருசிக்க அழைக்கின்றன.

"பொதிகைப் புனலாய்ப் பொங்கும் தமிழே" எனத் தமிழையும் போற்றி... அன்பு, இன்பம், காதல், மனித நேயம்,

விவசாயம், வாழ்வியல், சமூக அவலம் எனப் பல் துறைகளுள்ளும் புகுந்து பொறுக்கிய முத்துக்களால் புதுக்கவிதை, கிராமியக் கவிதைகள், அந்தாதிக் கவிதைகள், தன்முனைக் கவிதைகள், ஹைக்கூகள், சென்றியுக்கள் எனச் சரம் தொடுத்து நமக்களிக்கின்றார்.

இலக்கிய உலகில் காலடி வைக்கும் எவரும் தங்கள் குடும்பம், சூழல், சமூகம் என்பதிலிருந்து தங்களது இலக்கியப் பணி தொடங்கி, தேசிய மற்றும் சர்வதேசம் என்று தமது எல்லைகளை விரிவடையச் செய்வது கண்கூடு. ஆனால் டாக்டர் ஜலீலா முஸம்மில் ஏக காலத்தில், மிகக் குறுகிய காலத்துள் சூழல், சமூகம், தேசியம், சர்வதேசம் என தனது இலக்கியப் பரப்பை வியாபிக்க வைத்துள்ளமை வியக்க வைக்கின்றது.

மிகக் கடினமான துறையில் கல்விகற்று... வைத்தியத்துறையில் தேர்ந்து... பதவிபெற்று... குடும்பச்சுமை, பதவிப் பொறுப்பு என்பவற்றுடன் இலக்கியத்திலும் வீறுநடை போடும் டாக்டர் ஜலீலா அவர்கள் மேலும் பல்வகை நூல்களை இலக்கிய உலகுக்கு வழங்க வேண்டுமென இதயம் மலர்ந்து வாழ்த்துகின்றேன்.

மணிக்கூ கவி ஹாஜியானி எஸ்.ஏ. நஸீரா. BA, MA
ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்
"புத்தொளி" நிறுவுனர்
ஏறாவூர்

# வாழ்த்துப்பா



மீன்களோ நீரில் நீந்தும்
மீளுமோ வளியில் வந்தால்?
ஏன்கவி தன்னில் மட்டும்
இறகுகள் முளைத்த தென்று
தேன்தமிழ்க் கவிக்கூட்டத்தில்
தேடியே நானும் பார்த்தேன்
நான்மனம் அடக்கிக் கொண்டு
நவில்கிற நூலைக் கேட்டேன்.

காற்றுடன் பேசும் சொற்கள்
கதிருடன் நடக்கும் சீர்கள்
ஊற்றுடன் சேர்த்துப் பாட்டில்
உளறிடும் அணியின் வாட்டம்
ஈற்றிலா அதிச யங்கள்
எழுத்தினில் இருக்கும் போது
காற்றினில் பறக்க மீன்கள்
கற்றிடின் தப்பே இல்லை.

இவரெழுத் தாலே நாளை
இளமையாய் முதுமை மாறும்
இவரெழுத் தாலே நாளை

இறப்புகள் இல்லா தாகும்
இவரெழுத் தாலே நாளை
இமயமும் கடுகாய்ப் போகும்
இவரெழுத் தாலே நாளை
இயற்றமிழ் கவியாய்ப் போகும்.


வாமழை என்று சொன்னால்
வரும்மழை உன்றன் பாட்டின்
பூமழை வாசம் வந்தால்
புவனமே மலர்ந்தது நிற்கும்
தீமழைப் பெய்யும் உந்தன்
திருமொழிச் சொற்க ளுக்கு
சாமரம் வீசு கின்றேன்
சமரசம் வேண்டு கின்றேன்.

உன்கவி வாழ்க வாழ்க
உயிர்வரை உலுக்கு கின்ற
உன்னணி வாழ்க வாழ்க
உளந்தனில் நிறைந்து நிற்கும்
உன்னசை வாழ்க வாழ்க
உயர்வுகள் இனியும் காணும்
உன்னரு சீர்கள் வாழ்க
உலகமே போற்ற வாழ்க.

என்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

இதழாசிரியர், பதிப்பாளர் தமிழ்நெஞ்சம் நிறுவனர்,
தலைவர் FACT. Fr தமிழர் கலைக்கலாச்ச்சார பண்பாட்டுப் பேரவை, பிரான்சு



# மகிழ்ந்துரை



அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு... "சிறகு முளைத்த மீன்" பறக்கிறது. வானத்தில் நீருக்கு நிறமில்லை... நீர்நிலைகளில் மீன் வானத்தில் பறப்பது வியப்பில்லை... தமிழ் இலக்கியத்தில் கவிதை வானத்தில் பறக்கும் சிறகுகள் முளைத்த மீன் மருத்துவர். ஜலீலா முஸம்மில்...

ஊரடங்கு காலம் பல மீன்களுக்கு சிறகு முளைக்க பல வானங்களை அறிமுகப்படுத்தியுள்ளது...

தேசங்கள் கடந்தும் ஊடகங்கள் வாயிலாக பல நட்புகளை வளர்க்க ஸிரிலங்கா பெண் கிளப் மூலமாக அறிமுகமான மருத்துவர் ஜலீலா முஸம்மில் அவர்களின் கவிதைகளால் ஈர்க்கப்பட்டேன்...

கவிதைகள் எழுதுதல் என்பதைவிட காலத்தில் வெளிக்கொணர்வது மிக முக்கியம்... அந்த வகையில் நூல் வடிவில் 89 தலைப்புகளில் தன் தமிழ் தாகத்தை நீந்தி தீர்த்துள்ளார்...

ஒரு இனத்தை வளர்க்க வேண்டுமானால் அவ்வினம் பேசும் மொழியை வளர்க்க வேண்டும்.


மொழி பழைமையான ஒரு இனத்தின் அடையாளம் மக்களில் இருந்து மக்களை வேறுபடுத்தி காட்டுவதும், மொழியின் இலக்கிய வளங்களை சிறப்புறச் செய்ய அதில் இலக்கியங்கள் படைக்க வேண்டும். அந்த இலக்கியங்கள் பேசப்பட வேண்டும் புத்தகங்களே ஒரு மொழியின் அடையாளம்... கவிதைகளே ஒரு மொழியின் வெற்றி... மனதில் இருக்கும் எண்ணங்களை கவிதையாக மாற்றுவதே மொழியின் சிறப்பு...

புகழ் மணக்கும் பூமான் நபி என்ற தலைப்பில் அமைந்த கவிதை எம்பெருமான் முகமது நபி ஸல்லல்லாஹு அலைஹி அவர்கள் புகழ் பாடி இருப்பது வெகு சிறப்பு... “கனவுகள் கண்டேன்” என்ற தலைப்பிலும் உறங்காத இரவுகள் என்ற தலைப்பிலும் கவிதைகள் தலைப்பிடப்பட்ட கவிதைகளில் கவிஞர் தன் கனவுகளை இறக்கி வைத்துள்ளார். ஹைக்கூ, தன்னை கவிதைகள் மற்றும் சென்ரியூ துளிகள் என்ற தலைப்பிட்ட கவிதைகளிலும் இயல்பான நடையினை சிறப்பாகக் கையாண்டுள்ளார். எதார்த்தமான இயற்கை வாழ்வியலை பதிவு செய்துள்ளார்.

ஹைக்கூ என்ற தலைப்பில்
சிறிய நத்தை
மெல்ல நகர்கிறது
அதன் வழித்தடம்

அவர் ஹைக்கூ வில் முத்திரை பதித்துள்ளார்... நத்தை நகர அதன்வழிதடமே நகர்கிறது... இது சிறப்பான ஜென் ஹைக்கூ...





நாம் நம் வாழ்க்கை என்ற பயணத்தில் சிறிய அளவிலாவது முயற்சி செய்து முன்னேற்றம் நோக்கி நகர வேண்டும்... அப்போது நம் வழித்தடம் மாறும் நம் பயணம் வெற்றி பெறும்... நாம் நம் ஆசைகளையும் கனவுகளையும் சுமந்து கொண்டு செல்லும் பொழுது நத்தை போலவாவது நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும்... அதுவே வெற்றிக்கான பயணம் ஆகும்

‘‘தீண்டும் காற்றின் முகவரி தேட’’

‘‘சபதங்கள் வென்று சத்தம் எதிரொலிக்க’’

‘‘பொன் வண்டு கடித்த மீதியை இலை’’

‘‘கண்களிரண்டும் பட்டாம்பூச்சி இமையால் சிறகடிக்கும் பறவை’’

‘‘நதிக்கரை சூரியனின் நனையும் பொழுது’’

‘‘எங்கேயோ இறந்துபோன காக்கையின் ஒரே ஒரு இறக்கை"

கிளிஞ்சல்களாக ஜலீலா முஸம்மில் அவர்களின் கவிதைகள் குவிந்து கரைகின்றன... ‘‘தொட்டும் தொடாமலும் விட்டு செல்லாமலும் அலைகளாக நம் மனதினிலே...’’

‘‘இமையால் சிறகடிக்கும் பறவையாக...’’

தனதுளன அழகியலை அழுத்தமாக பதித்துள்ளார்...

நூல் முழுவதும்...

திருமதி. ஷர்ஜிலா பர்வீன் யாகூப்
கம்பம், அரசு கணக்கர், சார் நிலை கருவூலம், தேனி
தமிழ்நாடு, இந்தியா

# பூவிற்கு வாழ்த்துப் பூக்கள் தூவி...




சிறகு முளைத்த மீன் செந்தமிழ்க்கடலில் நீந்தத் தொடங்கியிருக்கும் புதிய வரவு. வாசித்தேன் யோசித்தேன். மொழியால் நேசித்தேன்.

புதுக்கவிதை, கிராமியக்கவிதை, ஹைக்கூ, சென்ரியு, அந்தாதி, தன்முனை எனக் கதம்பம் ஒன்றையே தொகுதியாக தந்திருக்கிறார் கவிதாயினி ஜலீலா முஸம்மில். ஜலீலா உற்சாகமான பெண். Sri Lanka penclub-ல் உள்வாங்கிய போதுதான் இவரது அறிமுகம் கிடைத்தது. கவிதாயினி கமர்ஜான் பீவிதான் இணைத்துக் கொள்ளும்படி இந்த மீனை எங்கள் கடலில் தந்திருந்தார்.

ஒரு வைத்தியர். அதுவும் குடும்பத்தலைவி. எழுத்துலகில் இயங்க இவருக்கெங்கே நேரமிருக்கப்போகிறது என நினைத்தேன். அந்த நினைப்பைத் தவிடுபொடியாக்கினார் ஜலீலா.

மொழியின் அற்புதங்களைத் தனக்குள் சுமந்து கொண்டு அவற்றை வெளிப்படுத்த வழியறியாமல் தவித்துக் கொண்டிருந்தார். அது ஒரு கொரோனாக்கால இணைவு. எமது அமைப்போடு கலந்து தன்னைப் புடம்போட அவருக்கும் நேரமிருந்தது.



அசுரவேகத்தில் இவரது பிரதிபலிப்புகள் கண்டு பிரமித்துப்போனேன்.

அணைகட்டியிருந்த வாய்க்காலுக்கு அணைமீதொரு சிறு துளை. இதுதான் Sri Lanka penclub இவர்மீது செய்த சத்திர சிகிச்சை.

முட்டிமோதி உடைத்துக் காட்டாறாகப் பிரவாகிக்கத் தொடங்கினார் ஜலீலா. அந்தக் காட்டாறு இன்று சிறகு முளைத்த மீனைத் தந்திருக் கிறது. அளவற்ற புளகாங்கிதம் அடைகிறேன்.

கவிதாயினியின் கவிதை வைப்பு முறைகள் என்னைக் கவர்ந்தன. இறைவன், நபிகளார், தந்தை, தாய், ஆசிரியர், கணவர் என ஒரு சீரிய வைப்பு முறையில் பாடுகிறார்.

பரிவோடு தலைகோதும்  
உங்கள் கைகள் எங்கே  
உரிமையுடன் சாய்ந்து கொள்ளும்  
தோள்கள் எங்கே  
நெஞ்சமெல்லாம் உம் ஞாபகங்கள்  
கொஞ்ச நஞ்சமல்ல  
நெருஞ்சிபோல் எம்மை  
நெருடித்தான் போகிறதே

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்ற கவிதையில் தந்தைமீதான பேரன்பையும் இழப்பினாலான பெருந்துயரையும் கச்சிதமாகச் சொல்லியிருக்கிறார் ஜலீலா.

பெற்றார் உலகிற்கீந்த குழந்தைக்கு,  
அந்த உலகையே பரிசாய்  
வழங்குவோர் நீங்கள்  
"ஆலம் விதையாகி விழுந்தீர் ஆசானே"  
கவிதையில், ஆசான்களை ஏற்றிப் பாடுகிறார்.

“சிறகு முளைத்த மீன்”கவிதையில்
என் காதலின் ஆழம்
அறிந்து கொள்.
ஆர்ப்பரி... ஆசீர்வதி...
வாழ்த்து... வாழ்... வா...

என்று காதலுணர்வை ஓங்காரித்துப்பாடும் தன்மையைக் காட்டுகிறார்.


“நேயம்” என்ற கவிதை அற்புதமானது.

அதில் இயற்கையின் அத்தனை சக்திகளும் பிணைய மனித சக்திமட்டும் பிணைப்பை ஒறுக்கும் பேடிமைத்தனத்தைச் சாடுகிறார் சுரீரென சிறு சாட்டையால்.

பணம் இருந்தால்
பார் போற்றும்
புடைசூழச் சனம் இருக்கும்

“விட்டுப்போன சொந்தங்கள்” என்ற கவிதையும் மனிதனின் இழிசெயலை இவ்வாறு பிரஸ்தாபிக்கிறது. காண்பவற்றைக் கேட்பவற்றை எல்லாம் பாடும் திறன் வாய்க்கப் பெற்றுள்ளார் டாக்டர் ஜலீலா. பலதரப்பட்ட மனிதர்களோடு புளங்கும் இவரது தொழில் இவருக்கு தவிர்க்கமுடியாத அனுபவங்களைத் தரும்.இலக்கிய உலகில் ஜலீலா அழியாத தடம் பதிக்க இவரது படைப்பு முயற்சிகள் சிலாகிக்கப்பட மனதார வாழ்த்துகிறேன்.

சம்மாந்துறை மஷூறா
தலைவி
Sri Lanka penclub



# மகிழ்ந்துரை



வாசகர்களின் மனங்களை விடத் திறன் நோக்காளர்களின் கரங்களே பலமானவை. மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். மர்ஹூம் U.H.முஹம்மத், பௌசியா தம்பதிகளின் மூன்றாவது பிள்ளை. வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் S.H.முஸம்மில் அவர்களின் உள்ளத்தரசி. கவிதை, கட்டுரை, பாடல் என பல துறைகளிலும் பரிச்சயமானவர்.

என் அன்புத்தோழி Dr.ஜலீலா முஸம்மில், மிகக் குறுகிய காலத்தில் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவள். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.

வாசிப்பில் தனது எழுத்து நுட்பத்தை வசமாக்கிக் கொண்டவர். ஆனாலும் ஆரவாரமில்லாமலும் அலட்டலுக்கு இடம் கொடாமலும் இலக்கியத்தின் மீதான தனது சிரத்தையை இந்த “சிறகு முளைத்த மீன்” கவிதைத் தொகுதியின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.


இந்தத் தொகுதியில் இறைவனைப் போற்றி தொடக்கம் சேற்றில் நின்று சோற்றைத் தருகிறார் வரையிலான 85 கவிதைகள் உள்ளடக்கம்.

தன்னைச் சுற்றியுள்ள பிரதேசத்திலிருந்து கவிதையின் களம் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றது. சமுதாயச் சீர்திருத்தங்கள் தொகுதி எங்கும் நிறைந்து கிடக்கின்றன.

சிறகு முளைத்த மீன் என்பது தொகுதியின் முத்திரைக் கவிதை. கவிதைகளின் புனைவு மொழி, தேர்வு செய்யப்பட்ட கரு, அழகுற வடிவமைப்பு, அதற்கான நுட்பம் போன்றன கவிதைத் தொகுதிக்கு மருதோன்றி இட்டு மகிழ்கிறது.

சிறகு முளைத்த மீன் நினைவில் நிற்கும் தொகுதி. இவருடைய இந்த முதற் பிரசவம் சுகப்பிரசவமாக அமைய வாழ்த்துக்கள்.

றிப்கா அன்ஸார்
பிரதி அதிபர்
கமு/கமு/அல் - ஹிலால் வித்தியாலயம் சாய்ந்தமருது



# என்னுரை



முதற்கண் இறைவனைத் துதித்தவளாக,

“வீறுடைய செம்மொழி தமிழ்மொழி! உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி!”

என்ற பெருஞ்சித்திரனார் கூற்றுக்கு இணங்க வீறுடைய செம்மொழியான தமிழ் மொழியிலே சிறுபராயம் முதலே காதல் கொண்டவள் நான். அக்காலம் முதல் வாசிப்பை நேசித்ததிலே அரும்பிய கவிதைகளை அங்கங்கே எழுதி வைப்பதும் உண்டு. எப்போதும் வாசிப்பு எதிலும் வாசிப்பு என்று தணியாத தாகமாய் தமிழின் பற்று நெஞ்சில் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.


பள்ளிக்காலந் தொட்டே கவிதைகள் சிறுகதைகள் நாவல்கள், கட்டுரைகள் வாசிப்பதில் அதிக ஆர்வம் இருந்தது. அதற்கான ஊன்றுகோலாக இருந்தவர், தமிழை விருப்புடன் எனக்குள்ளே வளர்த்தவர் என்னுடைய தந்தையே என்று இவ்விடத்தில் கூறுவதில் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். என் தமிழின் ஆஸ்தான குரு அவரே. எதை எழுதினாலும் தந்தையிடம் முதலில் அதைச் சமர்ப்பித்து பாராட்டுக்கள் வாங்குவது என் வழக்கமாக இருந்தது. அக்காலங்களில் பாடசாலையில்


தோழியருடன் பாடல்கள், கவிதைகள் புனைந்து பாடியது, விளையாடியது, போட்டி போட்டது எல்லாமே இப்போது நினைத்தாலும் மனதைக் களிப்பில் ஆழ்த்துகிறது.

உண்மையில் தணியாத தமிழ்த்தினவெடுத்தவள் என்பதைப் பெருமையுடன் கூறுகிறேன். சிறுபராயம் முதலே எழுத ஆரம்பித்ததில் காற்றோடு கலந்தவை பல. பத்திரப்படுத்தி இருப்பதோ ஒரு சில. முன்னர் எனது எழுத்துக்களுக்குக் களமும் காலமும் அமையவில்லை என்றே சொல்லலாம். இப்போது அது நனவானதையிட்டு மிகவும் மனத்திருப்தி அடைகிறேன். முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. கல்வியில் தேர்ந்து உயர்கல்வி, பல்கலைக்கழகம், வைத்தியப்பணி என்று காலச்சக்கரம் சுழன்றாலும் எழுத்துலகம் எனது இன்னொரு கண்ணாகவே இருந்தது. எழுத்தும் வாசிப்பும் நான் நேசிக்கும் துறைகள். கற்றலின் மற்றும் பணியின் ஊடே கவிதை எழுதுவதை விடவே முடியவில்லை.

குடும்ப நிர்வாகம், பிள்ளைகளின் நலன், அரச பணி போன்ற சுமைகளால் எழுத்துத்துறையில் பயணிக்க முடியாமல் போனதை இட்டு வருத்தமே. ஆயினும் பணி தவிர்ந்த காலங்களில் எழுத்துலகில் பயணிக்கிறேன். அவசர வாழ்க்கைப் பயணத்தில் எழுதுவதற்காக நேரத்தை முகாமைத்துவப் படுத்திச் செலவு செய்கிறேன். அதற்கு உறுதுணையாக இருக்கும் அன்புக் கணவருக்கு இத்தருணத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கவிதை நூல் ஒன்று வெளியிட வேண்டும் என்ற ஆசை நீண்ட நாளாகவே மனதில் ஒரு மூலையில் இருந்து கொண்டே இருந்தது. எண்ணத்தில் தோன்றியவை எல்லாவற்றையும் எழுத்தில் கொண்டு வர முடியாவிட்டாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகள்





அமையும்போது எழுதிய கவிதைகளைக் கோர்த்தெடுத்திருக்கிறேன். அவற்றை ஒரு தொகுப்பாக வெளியிடுவதில் புளகாங்கிதமும் பெருமிதமும் அடைகிறேன். எனது நூலானது தவழும் சிறு குழந்தையொன்று நடக்க முயற்சிப்பது போன்றதே. பிழைகளைப் பெரியவர்கள் பொறுத்தருள வேண்டும்.

"சிறகு முளைத்த மீன்" கவிதை நூலானது புதுக்கவிதைகளாகவும் கிராமியம் மணக்கும் கவிதைகளாகவும், ஹைக்கூ, தன்முனை, சென்றியுக்களாகவும் பல்சுவையில் புத்தூக்கத்தோடு உங்கள் கைகளில் தவழ இருக்கிறது. பெரும்பாலான கவிதைகள் முகநூல் குழுமங்களில் நடைபெற்ற போட்டிகளில் எழுதி வெற்றிச்சான்றிதழ் பெற்றவை என்பதில் மகிழ்ச்சி. சான்றிதழோடு ஒருசில கவிதைகள் விருதுகளும் பெற்றன. "சிறகு முளைத்த மீன்" நிச்சயம் நல்ல சேதி உங்களுக்குக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன். சமுத்திரத்தின் ஆழத்தில் அமிழ்ந்திருக்கும் மீனொன்று கவிச்சிறகு முளைத்து விண்ணில் எம்பிப் பறக்கிறது. கவிச்சிறகுகள் சுமந்து வருபவை ஆழ் கடலின் முத்துக்களாகப் பரிணமிக்க வேண்டும் என்பதே என் அவா. கனவு நனவாகும் இச்சந்தர்ப்பத்தில் எழுத்துலகில் பிரவேசிக்க, வளர்த்துக் கொள்ள உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி நவிலக் கடமைப்பட்டுள்ளேன்.

அந்த வகையில் எனக்குள்ளே புதைந்து கிடந்த தமிழை வெளிக்கொணர்ந்த, அதற்கான ஊட்டங்களை வழங்கியவர்களான சிறீலங்கா பென் கிளப் எனும் பெண் எழுத்தாளர்கள் அமைப்பின் தலைவி சம்மாந்துறை மஷூறா (ஆசிரியை, அஷ்ரப் வித்தியாலயம், மாவடிப்பள்ளி), மற்றும் அதன் அங்கத்தவர்களான திருமதி கமர்ஜான் பீவி (JP), (Diploma in psychology) ஹூனுப்பிட்டிய,

வத்தளை, திருமதி ஷர்ஜிலா பர்வின் (மத்திய அரசு கணக்காளர், தமிழ்நாடு, இந்தியா), மணிக்கூ கவி நஸீரா ஆப்தீன் (ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர், ஏறாவூர்), திருமதி றிப்கா அன்ஸார் (அதிபர், சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயம்) மற்றும் இன்னும் எனது தமிழ் வளர உரமிட்ட அனைவருக்கும் எனக்கு கல்வி கற்பித்த அனைத்து ஆசான்களுக்கும் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிக வேலைப்பளுக்களுக்கு மத்தியில், குறுகிய நேர இடைவெளியில் எனக்கு நூல் சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளையும் தந்து இன்னும் அணிந்துரையையும் வழங்கிய மணிக்கூ கவி நஸீரா ஆப்தீன் அவர்களுக்கும் வாழ்த்துப்பாவினைத் தந்த தமிழ்நெஞ்சம் அமின் ஐயா (பதிப்பாளர், இதழாசிரியர் தமிழ் நெஞ்சம் நிறுவனர், தலைவர் FACT, Fr தமிழர் கலைக் கலாச்சார பண்பாட்டுப் பேரவை, பிரான்சு) அவர்களுக்கும் வாழ்த்துரைகள் வழங்கிய சம்மாந்துறை மஷூறா மற்றும் திருமதி றிப்கா அன்ஸார் இருவருக்கும் மகிழ்ந்துரை வழங்கிய ஷர்ஜிலா பர்வின் அவர்களுக்கும் பின்பக்க அட்டையில் என்னை அறிமுகப்படுத்திய திருமதி கமர்ஜான் பீவி சகோதரி அவர்களுக்கும் எனது நனி நன்றிகளையும் உளமார்ந்து சமர்ப்பிக்கிறேன்.

இனி வாருங்கள், சிறகு முளைத்த மீனோடு கவிப்பயணம் செய்வோம்.


நன்றியோடு,

டாக்டர் ஜலீலா முஸம்மில்
(போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு)
ஏறாவூர். இலங்கை.

# சிறகு முளைத்த மீனின் சிறகில்



| | | |
|---|---|---|
| 1. | இறைவனைப்போற்றி | 1 |
| 2. | புகழ் மணக்கும் பூமான் நபி | 3 |
| 3. | தந்தை சொல் மிக்க மந்திரமிலலை | 6 |
| 4. | தாயிற்சிறந்த கேடயமில்லை | 8 |
| 5. | ஆலம் விதையாக விழுந்தீர் ஆசானே | 9 |
| 6. | சிறகு முளைத்த மீன் | 12 |
| 7. | இவள் உன் இல்லாள் | 14 |
| 8. | நேயம் | 16 |
| 9. | சிந்தித்துச் செயல்படு | 18 |
| 10. | ஓடக்கர மண்ணெடுத்து | 19 |
| 11. | வீழ்வதென்ன மனிதா நீ | 20 |
| 12. | கனவு கண்டேன் தோழி | 22 |
| 13. | உறங்காத இரவுகள் | 24 |
| 14. | பெருஞ்சிறை | 25 |
| 15. | அந்தாதிக் கவிதை - வகுப்பறை | 29 |
| 16. | களையெடுக்கும் கன்னிப் பெண் | 30 |
| 17. | அகவை தின வாழ்த்து | 31 |


| | | |
|---|---|---|
| 18. | அறிவால் அறிவாய் உன்னை | 33 |
| 19. | இளந்தளிரே இருளிள் மூழ்காதே | 35 |
| 20. | மஞ்சக்காட்டு மைனா கொஞ்சிப் பேசிப்போனா | 37 |
| 21. | தன்முனைக்கவிதைகள் | 38 |
| 22. | நமக்கான கவிதை | 39 |
| 23. | பெண்ணியம் போற்றுவோம் | 41 |
| 24. | பிரியமுடன் | 42 |
| 25. | ஹைக்கூ கவிதைகள் | 45 |
| 26. | மா... ரணம் | 46 |
| 27. | மயங்கினேன் சொல்லத்தயங்கினேன் | 48 |
| 28. | வாழும் வரைப் போராடு | 49 |
| 29. | சென்றியு துளிகள் | 50 |
| 30. | தேவதையும் மகளும் | 51 |
| 31. | மனசெல்லாம் நெறஞ்சவளே | 54 |
| 32. | சின்னஞ்சிறு சிட்டுக்கள் நாம் | 55 |
| 33. | விட்டுப்போன சொந்தங்கள் | 57 |
| 34. | கனவு மெய்ப்படவேண்டும் | 58 |
| 35. | பொறுமை | 59 |
| 36. | இவை போதுமெனக்கு | 60 |
| 37. | விவசாயி வாழ்வு | 62 |
| 38. | தன்முனைக் கவிதைகள் | 63 |




| | | |
|---|---|---|
| 39. | நாட்டார் பாடல் | 64 |
| 40. | நாதம் இயற்றும் நதி | 67 |
| 41. | அந்தாதிக் கவிதை - ஆடும் கூடுகளே | 68 |
| 42. | முகமூடி | 69 |
| 43. | கார்கால மேகமே | 70 |
| 44. | தூளியிலே தூதுணம் | 71 |
| 45. | ஆறாம் விரல் | 73 |
| 46. | இயற்கை | 75 |
| 47. | உழைப்பே உயர்வு - தன்முனைக்கவிதைகள் | 76 |
| 48. | மாம்பழக்குருவி | 77 |
| 49. | என் நெஞ்சுக்குள் நுழைந்துவிட்டாய் | 79 |
| 50. | மாபெரும் சக்தி | 80 |
| 51. | தீண்டும் கனவுகள் | 81 |
| 52. | மகாத்மா காந்தி | 82 |
| 53. | பொதிகைப் புனலாய்ப் பொங்கும் தமிழே | 85 |
| 54. | மனித நேயம் போற்றுவோம் | 86 |
| 55. | இயற்கை | 87 |
| 56. | செந்தமிழ்த் தேன் மொழியாள் | 88 |
| 57. | புத்தாண்டு பிறக்கட்டும் | 89 |
| 58. | இளமையும் முதுமையும் | 90 |
| 59. | என்னைக்காதலி எந்தன் காதலி | 91 |


| | | |
|---|---|---|
| 60. | ஞானமே துணை | 92 |
| 61. | ஆழிப்பேரலை | 93 |
| 62. | பூக்காரப்புள்ள | 95 |
| 63. | தரணியில் பெருமை வேண்டும் | 96 |
| 64. | பூதாகர வலை | 97 |
| 65. | போதை வேண்டாம் | 100 |
| 66. | பொன்னி வண்டு | 101 |
| 67. | நீயும் நானும் | 103 |
| 68. | புன்னகை பூக்கும் புதிய மலரே, மகளே | 105 |
| 69. | மதிப்பு | 106 |
| 70. | மணமாகா மங்கை | 107 |
| 71. | புதுநெறி தந்த புலவர் பாரதி | 108 |
| 72. | வலிகள் தாங்கும் ஆண் தேவதை | 111 |
| 73. | நாடு முன்னேறும் | 113 |
| 74. | நற்றமிழ் வாழ்க | 115 |
| 75. | துன்பத்தில் துணைவரும் தோழன் | 117 |
| 76. | அந்தாதிக் கவிதை - அன்னை ஒரு ஆலயம் | 118 |
| 77. | கல்யாண மாலை சூடவா | 119 |
| 78. | காத்திருக்கிறேன் | 120 |
| 79. | மரமே வாழ்வின் வரம் | 121 |
| 80. | விழியே கதையெழுது | 122 |




| | | |
|---|---|---|
| 81. | உறவாடும் உணர்வுகள் | 123 |
| 82. | துளியும் தளராதே | 124 |
| 83. | வெளிச்சத்தை நோக்கிய பயணம் | 125 |
| 84. | மணக்கும் மீன் குழம்பு | 126 |
| 85. | சேற்றில் நின்று சோற்றைத் தருகிறார் | 127 |

## 1. இறைவனைப் போற்றி



இயற்கை எழில்
வண்ணத்தில் நீயே
எங்கும் நிறைந்தே
இருப்பாயிறையே

தன்னிகர் இல்லாத்
தலைமை ஆகி
அன்பில் உலகை
ஆளும் இறையே

அடி பணிந்தே
அன்பாய்க் கேட்க
அடிமை எமக்கு
அருள்வாய் இறையே

மங்கல வாழ்த்து
மடை திறக்கப்
பொங்கிச் செல்வம்
பொழியும் இறையே

குறைகள் கூடிக்
குவலயம் நிறையக்
கறைகள் கழுவிக்
காத்திடும் இறையே

கோடி மனுக்கூட்டம்
கெஞ்சியிறைஞ்சிடக்
கருணையின் கோபுரமாய்க்
கருத்தினில் இருப்பாயே!


பாவச் சுமைகள்
பாரினில் கூடிடப்
பாவமன்னிப்பைப்
பரிந்திடும் கோவிறையே!

மானிடர் பணிந்து
மனதாரத் தொழுதிட
மகிழ்ந்து எம்மை
மாற்றிடு இறையே

அடியார் நாம்
பிறந்ததுன் தாள்
தொழுதிடவேதான்
அறிந்தோமே ஆதியிறையே!

தடைகள் நீங்கித்
துயரம் களைந்திடத்
தினமுன்னைத்
துதித்தோமிறையே!





## 2. புகழ் மணக்கும் பூமான் நபி

புகழோடு பிறந்து
புகழோடு வாழ்ந்து
புகழோடு மரணித்து
புகழோடு நித்திய ஜீவனாய்ப்
பூலோகத்தில் வாழ்கிறீர்
பூமான் நபியே...

புர்க்கானே முதல் அற்புதம்,
புராக் வாகன மிஃறாஜும்
புண்ணிய ஹிஜ்ராவும்
புனிதமிகு பயணங்களாய்
புகழ் மணக்கும் அற்புதங்கள்
புதுமை கொண்டு பறைசாற்றும்...

சந்திரனைப் பிளந்து
சாகசங்கள் பல காட்டி
சந்தேகமற்ற சமத்துவத்தைச்
சற்குணத்தோடு வாழ்ந்து காட்டி
சங்கையானதொரு சன்மானமாய்ச்
சன்மார்க்கம் தந்தனரே...

தீர்க்கதரிசனங்கள்
தீர்வான மருத்துவங்கள்
திறமையான வழிநடத்தல்
தினவெடுத்த இறை வேட்கை
தலைசிறந்த அரசியல்


தணிவான போதனை
தரணி போற்றும் அதிசயங்கள்
தாட்சண்ய நபி வாழ்க்கையிலே


அழுதது ஈச்சமரம்... அதன்மீது
அவர் சாய்ந்து உரை நிகழ்த்த
ஆறுதல் அடைந்தே
அமைதி காத்ததாம்...
அவர் கட்டளைக்கு இரு மரங்கள்
அடிபணிந்தே நகர்ந்ததாம்
அறிவீரோ அன்பர்களே...
அண்ணலரின் அற்புதங்கள்...

அற்புதங்கள் ஆயிரங்கள்
அவனியிலே ஆக்கியவர்
அன்பாலே அனைவரையும்
ஆரமாக்கிக் கோர்த்தவர்
அஞ்ஞான இருள் அகற்ற
அண்ணலாய் வந்தவர்...

அனாதைகளின் துன்பங் கண்டு
அனலாய்க் கொதித்தவர்
அநீதியழிக்க அணிதிரட்டி
அக்கினியாய்ப் போர்தொடுத்தவர்

நெஞ்சுரமும் நேர்மையும்
நெறியான வாழ்க்கையும்
நிகரில்லா நன்மையும்





நீதி வழுவாச் செங்கோலாட்சியும்
நயம் கொண்டு இயம்பிடுமே
நானிலத்தில் உம் புகழை...
நன்றாக ஓதிடுமே
நன்னபியின் நாதங்களை...

நாயகத்தின் நன்மார்க்கம்...
நித்தியமாய்ச் சத்தியமாய்...
நெஞ்சத்தில் ஏற்றிடுவோம்...
நல்லவைகள் செய்திடுவோம்...
நன்மைகள் அள்ளிடுவோம்


## 3. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை


கண்ணை விட்டு மறைந்தாலும்
கண்ணுள் ஒளியாய் இருக்கின்றீர்...
கண்ணே, மணியே என்றழைத்துக் கரும்பாய்
அன்பைச்சொல்கின்றீர்...

அன்பாயென் மகளை மடியில் அருகிருத்தி
ஆடை கட்டி வந்த நிலவென்பீர்...
அன்றும் இன்றும் என்றும் உங்கள்
ஆசைப் புதல்வி நானல்லவோ...

எம் கல்விக்காயத் தன்னலமின்றி உழைத்தீர்...
எம் வாழ்க்கை நலம் பெறவே அடித்தளமாய் இருந்தீர்
பணியில் ஓய்வு பெற்ற பின்னும்
ஓயாமல் எமக்காய் ஓடினீரே

பரிவோடு தலை கோதும்
உங்கள் கைகள் எங்கே...
உரிமையுடன் சாய்ந்து கொள்ளும்
தோள்கள் எங்கே...
நெஞ்சமெல்லாம் உம் ஞாபகங்கள்
கொஞ்ச நஞ்சமல்ல...
நெருஞ்சி போல எம்மை
நெருடித்தான் போகின்றதே...





புத்திமதி சொல்லி எங்களைப்
புடம் போட்டவர் நீங்கள்...
மெத்தக்கவனமாய்க் காரியங்கள்
திட்டமிட்டு செய்பவர் நீங்கள்...
வித்தைகள் பல கற்று
வித்தகர் ஆனவர் நீங்கள்...
சோதனைகள் பல தாண்டிச்
சூத்திரங்கள் கற்றவர் நீங்கள்...


இலக்கை அடைவதே உங்கள் குறிக்கோள்
தூரநோக்கே உங்கள் மேற்கோள்.
புகழுக்குப் புகழ் சேர்த்தவர் நீங்கள்
பெற்ற மக்களைக் கரைசேர்க்கத்
துடித்தவர் நீங்கள்...


ஞாலமது பிரிந்தாலும் நெஞ்சம்
அதில் நிலையாய் இருக்கின்றீர்
நினைவால் அன்பைப் பெருக்கின்றீர்...

இரு கரம் ஏந்தியே இறைஞ்சுகின்றேன் நான்...
இறைவன் உமக்குச்சுவனபதி
இனிதாய் உவந்து
தந்திட வேண்டும்...

# 4. தாயிற் சிறந்த கேடயம் இல்லை

தனயன் சிறக்கத்
தியாகம் செய்வாள்
துன்பம் தாங்கித்
துணை நின்றிடுவாள்
தன்னிகரில்லாச் சேவை
தன்னலமின்றியே செய்வாள்
தனியாய்க் காத்திடும்
தயாள குணத்தாள்
ஒளியாய் மாறி
வழியைக் காட்டுவாள்
அறிவை வளர்க்க
அருந்தவம் புரிவாள்
அவனியில் தன்னை
அர்ப்பணிப்புச் செய்வாள்
கேடுகள் பொறுத்தே
கேடயம் ஆவாள்
குழந்தையின் சிரிப்பில்
குதூகலம் கொள்வாள்
கவலை துடைத்துக்
கருணை புரிவாள்
இரணங்கள் பொறுத்த
இராணி அவளே
ஈடில்லா உறவு
உலகினில் தாயே





## 5. ஆலம் விதையாக விழுந்தீர் ஆசானே

ஆசிரியத்துவம்... வெறும் தொழிலல்ல
அது ஓர் பெருந்தொண்டு!
சமூக மாற்றங்கள் தருவிக்கும் கருவி!
எதிர்பார்ப்புகள் இல்லா அரும்பணி!

ஆசான்களே...
உங்களின் ஒரு விதையில்
ஓராயிரம் ஞான நந்தவனங்கள் உருவாகும்!
மாணவர் ஏற உதவும் ஏணி நீங்கள்...
மாணவரின் மற்றுமோர் பெற்றோர் ஆகினீர்கள்...

பாடங்கள் மட்டுமல்ல உங்கள் பணி...
உலக உண்மைகளை ஒருசேரக் கொடுப்பதுவே
உங்கள் பணி!
வரலாறுகளை உருவாக்கும் உந்துசக்தி நீங்கள்...
அறவழியை அன்புடனேவும்
ஏவுகணைகளும் நீங்கள்!

வாழ்வியலின் அடிப்படைத்தேவை – நீங்கள்...
அறிவியலும் உளவியலும் ஒன்று சேர்ந்த
ஔடதம் – நீங்கள்!
மாணவர்க்கு நம்பிக்கையுரம் தந்து
அறிவுக்கண்களைத்
திறக்கும் திறவுகோல்கள் நீங்கள்!

சமூகச்சிகிச்சை செய்யும்
சிறந்த வைத்தியர் – நீங்கள்...
நாகரிக முன்னேற்றத்திற்கான
நாயகர்களும் – நீங்கள்!
பெற்றோர் உலகிற்கீந்த குழந்தைக்கு
அந்த உலகையே பரிசாய்
வழங்குபவர் – நீங்கள்...


போதனைகள் மூலம்
சாதனைபடைத்தவர் நீங்கள்...
விழுமியங்கள் பேணும் – ஆலம்
விழுது நீங்கள்!

வெண்கட்டி எடுத்து அறியாமையிருளுக்கு
வெள்ளை பூசியவர் – நீங்கள்
ஈரமான போதிமரங்கள் நீங்கள்
உங்கள் ஞானம் பெற்றுப்
பறந்த பறவைகள் எத்தனை?
அறிவுப்புதையல் நீங்கள்...

அள்ள அள்ளக் குறையாச்
செல்வமும்–நீங்கள்!
மனிதனை மனிதனாக்கும்
மாமனிதர் நீங்கள்...

அர்ப்பணிப்பும்
அக்கறையும் உங்களிரு கண்கள்!
தேசத்தை வாகாய் வடிவமைப்பவர்
நீங்கள்...





தேசஎல்லை கடந்து
உலக உணர்வை வளர்ப்பவர் நீங்கள்!

நீங்கள் இல்லாத கல்வி...
ஆன்மா இல்லாத உயிர்!
உயிர் இல்லாத உடல்!
ஞான ஒளி ஏற்றும்
தீபங்கள்—நீங்கள்...

சிந்தனையைக்கிளறி விடும்
சீர்திருத்தவாதிகள் நீங்கள்!
சமூகப்பொறியாளர் நீங்கள்...
சமூக முன்னோடியும் நீங்கள்!
களநிபுணர் நீங்கள்...
காவல்காக்கும் தோட்டக்காரரும் நீங்கள்!

உங்கள் சேவை...
நாட்டின்—அத்தியாவசியத்தேவை!
வாழ்க வளமுடன்...
வளர்க பணிப்பற்றுடன்!


## 6. சிறகு முளைத்த மீன்...


காலப் பெருவெளியில்
விழி சிந்திய
மழைத்துளிகள்
மெய் சிந்திய வியர்வைத்துளிகள்
தந்த பிரளயம் நீ...
பனித்துளியும் நீ...

காரண சூழ்நிலைகளில்
நீ நானாக
நான் நீயாக
என் கஷ்டமும் நீதான்...
இஷ்டமும் நீதான்...

எதிர் எதிர் துருவங்கள் நாம்
ஆமாம், அவை தானே
இழுத்துக்கொள்ளும்...
ஈர்த்துக்கொள்ளும்...

அமைதியும் ஆழமும்
ஆணவமும் கலந்த
சமுத்திரத்தில் பயணிக்கும்
தென்றல்... புயல்...
எல்லாம் நீதான்...





முழுக்கவும்
காதலால் நிரம்பி...
உயரப் பறக்கும்
உப்பிய பலூனாக...
சிறகு முளைத்த மீனாக...
நான்!


என் காதலின் ஆழம்
அறிந்துகொள்...
ஆர்ப்பரி...
ஆசிர்வதி...
வாழ்த்து...
வாழ்...
வா...


## 7. இவள் உன் இல்லாள்

உன்
விலா எலும்பில்
மொட்டவிழ்ந்து,
உன்
உயிர்க்கூட்டில்
வியாபித்தவள்...
உயிர்கொண்டு
உயில் எழுதி
உனக்கென்றானவள்...

உன்னுயிர் கண்டு
கருக்கொண்டு
உன்னுயிருக்கு உருவம்
தருபவள்...

காதலாகிக்
காதல் தேடி–உன்
காலடியில்
காகிதமாய்க் கிடப்பவள்...
கலப்படமற்ற அன்பைக்
கண்ணியமாய்த் தருபவள்...





உன் உறவுகளுக்காய்
ஓயாமல்
ஓடோடி உழைப்பவள்...
உன் பிணி கண்டு
ஊணுறக்கமின்றித்தவிப்பவள்...

கட்டுக்கடங்காக்காதலை
விட்டுக்கொடுக்காமல்
வீசுபவள்...
உன் ஆளுமைக்குள்
பெட்டிப்பாம்பென ஒடுங்கி
அடங்கியவள்...

இவள் உன் இல்லாள்...

## 8. நேயம்


தூரத்து ஒற்றைப் பனைமரம்
அண்டி நிற்கும் குருவிச்சை...
பாரபட்சமில்லாமல்
ஒன்றாய் வளர...


எங்கேயோ இறந்து போன
காக்கையின்
ஒரேயொரு இறக்கைக்காய்...
ஒட்டு மொத்த காக்கைகளும்
ஒன்றாய்க் குரல் கொடுக்க...

தாயைத் தொலைத்து விட்டு
தனியாய்த் தவித்த கன்றை...
வீதியில் முகமறியாப் பசுவொன்று
நக்கிக் கொடுத்துப் பாலூட்ட...

இத்தனூண்டு தீனியை
இலட்சம் எறும்புகள்...
சத்தமின்றிச் சண்டையின்றிச்
சாப்பிட...

ஒரே செடியில் பூத்த மலர்கள்...
அத்தனையும் தம் வாழ்வை
தேனிக்களுக்காய், வண்டுகளுக்காய்
அர்ப்பணிக்க...
நேற்றுப் பெய்த மழை...







மரம், செடி, மண், மனிதம்
யாவையும்
சந்தோஷப்படுத்த...

அதே தெருவில்தான்...
அப்பன் பிள்ளையை அடிக்கிறான்
அடுத்த வீட்டுப் பையனோடு
சேருவியா?
சேருவியா?
சேருவியா?—என்று...

## 9. சிந்தித்துச் செயல்படு

வாழ்க்கையில் குழப்பங்கள்
வந்திடும் போதினில்
தயக்கம் இன்றியே
தன்னம்பிக்கை கொண்டு
முடிவுகள் எடுத்திடு,
முனைப்புடன் செயல்படு
சிந்தித்தே காரியங்களைச்
சீர்தூக்கிப் பார்த்திடு
தைரியத்தை இழக்காதே,
தளும்பித்தான் போகாதே
திட்டங்கள் போட்டே
திடசங்கற்பம் பூண்டு
தரணியில் பாதங்கள்
தடங்களை வைக்கட்டும்
துவக்கத்தில் முயற்சியே
தரமான மூலதனம்
துவளாமல் எழுந்து
தடைகளோடு போராடு
சோதனைகளைத் தாண்டிச்
சாதனைகள் படைக்கவே
சிந்தையைத் தூண்டிச்
சுயமுன்னேற்றம் அடைந்திடு
அவதானமாய் நிதானமாய்
இலட்சியம் அடைந்திடு





# 10. ஓடக்கர மண்ணெடுத்து

### கிராமியக் கவிதை

ஓடக்கர மண்ணெடுத்து
ஓம்மொகத்த வரைஞ்சேனே
ஓடத்தில ஒன்னோட
போகத்தான் துடிச்சேனே
ஓரமாக நின்னு
வேடிக்க பார்ப்பவளே
ஒண்டியாக என்னத்
தவிக்க வெச்சவளே
ஓடாதே பொன்மயில
ஒயிலாகப் போறவளே
ஒட்டி ஒறவாடிடவே
ஒம்மாமன் வந்தேனே
ஒலக அழகி
ஓம்பாதம் தொட்டிடவா
ஒன்னோடு ஒண்ணாகவே
ஓடோடி வந்திடவா
ஒத்தக்கத இதழாலே
சொட்டிடவே மாட்டாயோ?
ஒரசிப் பார்க்கவே
பூமுகத்தக் காட்டாயோ?

## 11. வீழ்வதென்ன மனிதா நீ?


இட்டுக்கட்டிக் கதைப்பார்...
இடுகுறிகள் இடுவார்...
குற்றமே இல்லை எனினும் குறை கூறித்திரிவார்...

தீண்டாமை ஒழிக்க வேண்டுமெனப்
பொய்ப்பாட்டுப் பாடுவார் ஆனால்
சாதிச் சண்டை செய்தே
தீரச்செயல் புரிவார்...
சின்னஞ்சிறு தவற்றைப்
பெரிதாய் ஊதியே
பேரம்பலம் ஆக்கிடுவார்...

சிறு உதவியைக்கூட
சிறுமை கொண்டு தட்டிப் பறிப்பார்...
பட்டிதொட்டியெல்லாம்
திட்டியே தீர்ப்பார்...
படமெடுத்த பாம்பாய்த்
தீது நினைப்பார்...

எங்கு சென்றாலும்
பின்தொடர்ந்து வருவார்...
விம்பத்தைக்கூட விடாப்பிடியாய்
குரோதத்துடன் பார்ப்பார்...
புறம் பேசி எள்ளி நகைப்பார்...
பிடிக்காதவன் போல்
போலி வித்தை காட்டிடுவார்...





சின்னஞ்சிறு பிள்ளையைச்
சீண்டிப்பேசுவார்...
சிறுமைப்படுத்தியே
சினம் கொள்ள வைப்பார்...

பரந்த மனம் வேண்டும் என்பார்...
படுகுழிகள் நிறையவே தோண்டுவார்...
திக்கற்றவருக்குத் திங்களாய்த்
திசை காட்டாமல் தட்டழிந்துபோக விடுவார்...

முற்றத்து மல்லிகையாய்ச் சுற்றம் இருக்க,
உற்றார் துறந்து உறவு ஏற்பின்றி வாழ்வார்...
பஞ்சமா பாதகம் பாரினில் தலைவிரித்தாடுது...
நெஞ்சின்னீரமெல்லாம் நஞ்சாகிப் போனது...

சமயம் பிறழ்ந்து மனிதா நீ வாழ்வதென்ன?
சமூகநீதி யாவும்
மறந்தது வீழ்வதென்ன?

## 12. கனவு கண்டேன் தோழி


காலமெல்லாம் உன்னோடு
கைகோர்த்துத் திரியவே
கவலைகள் இன்றிக்
கதையளக்கவே ஒரு
கனவு கண்டேன் தோழி

கடித்த மாங்காயைப்பறித்துக்
களவில் உண்ணவே
கண்களால் சாடை காட்டிக்
கபடி ஆடவே ஒரு
கனவு கண்டேன் தோழி

கல்லுக்கொத்தி,ஆற்றங்
கரையோரம் கால் நனைத்துக்
கைப்பிடித்து வரப்பில் நடந்து
கரப்பெடுத்து மீன்பிடிக்க ஒரு
கனவு கண்டேன் தோழி

கூட்டாஞ்சோறு சமைத்துக்
கூடியிருந்துண்டு
குறும்புக் கதைகள் பேசி
குதூகலித்திருக்கவே ஒரு
கனவு கண்டேன் தோழி
கடற்கரை மணலில்
கால் புதைத்து நடந்து
கதகளி ஆடும்





கடலலை பார்த்துக்
களித்திருக்கவே ஒரு
கனவு கண்டேன் தோழி

கல்விக் கூடத்தில்
கருவான நம் நட்பு
காலங்கள் பல சென்றாலும்
கனவிலும் தொடர்கிறதே
அன்புத்தோழி...


## 13. உறங்காத இரவுகள்

கண்ணுறங்கும் சாமத்திலே
கண்ணயராக் கண்கள் இரண்டு
கன்னியவள் நெஞ்சத்திலே
உன் நினைவைச் சுமந்து கொண்டு
முள் போன்ற மஞ்சத்திலே
மருகி உருகி நான் கிடக்கிறேன்
வரட்சி கண்ட நிலத்தினிலே
மழையாய்ப் பெய்ய வருவாயா?

கண்களிலே அருவியாய்க் கண்ணீர் ஒழுக
நினைவுகள் எல்லாம் பிரளயமாக
கனக்கும் என்னிதயம் திறந்து படிக்க
கணப்பொழுதில் நீ வாராயோ
ஊனிலும் உயிரிலும் கலந்து விட்டாய்
உன்மத்தம் எனும் பரிசைத் தந்து விட்டாய்

உறவாடும் உனது நினைவலைகள்
உரிமையோடு என்னைத் துரத்துகிறதே
கனவு மட்டும் காண்பது சரிதானா?
உன் காதல் பரிசு இதுதானா?
மீதியைத்தேடி ஒரு பாதி
நதியாய் ஓடி வருகிறது
நதியும் ஒருநாள் கடல் சேரும்
நாடியே வருவாய் எனை உணர்ந்து





## 14. பெருஞ்சிறை

ஒன்றுமே முற்றுப்பெறவில்லை
ஒன்றுமே முழுமையடையவில்லை
எதிலுமே குறைபாடு
எதிலுமே ஒரு அலுப்பு

எடுத்ததற்கெல்லாம் எரிச்சல்
கோபத்தை வெளிக்காட்ட முடியாத ஆதங்கம்
இடம்மாறிப்போய் விசிறி அடிக்கப்படும்
கூர் முனைகளாகக் கோபங்கள்
மௌனங்களும் மௌனித்து
மரணித்தனவோ?

நாசியில் வெளிப்படும் சுவாசம் தொடும் தூரத்தில்
இருந்தாலும் கண்டங்கள் தாண்டிய
ஒரு நீளத் தனிமை
சொட்டுச் சொட்டாக ஒழுகிக் கொண்டிருக்கும்
வேதனையின் புலம்பல்

ஒரே வார்த்தைக்காக ஒரே பார்வைக்காக
விம்மிக்கொண்டு இருக்கும் நெஞ்சம்
புரியாத புதிராக ஒவ்வொரு நாழிகையும்
ஏன் இப்படி?


எல்லாம் இருந்தும்
ஒன்றுமில்லாத சூனியமாக
ஒரு இயக்கத்தின் தூண்டலில்
இயந்திரத்தனமாக கால்கள்...


ஓ... புரிகிறது
இப்போது தெளிகிறது
தெளிவாகத் தெரிகிறது
ஒட்டுமொத்த கேள்விகளுக்கான
பதிலாக “நீ” எனப்படும்
ஓரெழுத்து!

இந்த ஒற்றை எழுத்து
எத்தனை துன்பங்களைச் செய்துவிடுகிறது
ஏகப்பட்ட துவம்சங்கள்
புரிந்து இதயத்தைக்
கொன்று விடுகிறது

கசங்கிய காகிதமாய்
நொறுங்கிய கண்ணாடியாய்
கொட்டி விட்ட தண்ணீராய்
காய்ந்து விட்ட கண்ணீராய்
ஒன்றுமில்லாமல் ஆகி விடுகிறேன்!

காற்றிலே மிதப்பது போல்
காட்டிலே தவிப்பது போல்
சிரசே பெருஞ்சுமையாகிப் போனது போல்!
என்ன இது
நான் நானாகவே இல்லையோ?
நாதி இன்றிப் பேதலிக்குமென்
நாடி நரம்புகளோ?






நாமாக இருந்து நானெனப் பிரிவது
கொடுமையேதான் மேடு பள்ளமெனச்
சீவியமோ பெருஞ்சிறை தான்!


பெருவெள்ளத் துயர் கட்டும் அணையாக,
ஒரு குறுஞ்சிரிப்பு துணையாக,
ஒற்றை விரல் மட்டும் இணையாக,
விழி வழியே ஓராயிரம்
கதைகள் பேச தனியாக,
அமைதியான சுனையாக, அல்லது
அலையாக, ஆர்ப்பரித்தேனும்
வருவாயா?
கனமழையாய்க் கவிதைகள் பொழியக்
காரணமாய் அமைவாயா?

ஆம்... இதுவும் கடந்து போகும்!
தேகமுகம் எங்கும் துரத்தும்
சோக தாகம் தீர்ந்தே போகும்!
காலப் பெருவெளி ஒடுங்கிக்
கணத்தில் ஒரு துளியாகிக்
கடந்து போகும்!
யாவும் மறந்து
எதுவும் நடக்காதது போல்
நீ இசைகையில்! இசையாகித்
திசைகளெங்கும்
உன்னான்மா அசைகையில்!
அடர்வனமான மனமாயை
சுருங்கி ஒரு புள்ளியில்!
சந்தோஷச் சந்திப்பில்!

அப்போது சிறுதும்பியாய்
உன் வான வழியாக
வான்வெளி அளக்கச்
சிறகடிப்பேன்...
பூமியும் வானமும் நீயாக
காற்றிடைவெளிக்குள்ளே
நான்!



## 15. அந்தாதிக் கவிதை - வகுப்பறை



வகுப்பறைகள் அழகுறுமே
ஆசானின் போதனையில்

போதனையின் வேதத்திலே
வென்றிடுவார் மாணாக்கர்

மாணாக்கர் வாழ்வினிலே
மலர்ந்திடுமே ஞானம்


ஞானத்தின் சோதியிலே
அகன்றிடுமே அறியாமை


அறியாமை நீங்கையிலே
உதயமாகுமே புதுசரித்திரம்

புதுசரித்திரங்கள் வளர்க்கவே
பாடுபடுமே வகுப்பறைகள்

## 16. களையெடுக்கும் கன்னிப்பெண்

சிலுசிலுவென்று வயலுக்குள்ள காத்து வீச
சலசலவென்று ஏரிக்குள்ள தண்ணியோட
மஞ்சவெயிலும் மனசுக்குள்ளே மகிழ்ச்சி தர
மாராப்பு சேலையோட மனச அள்ளி
மந்திரப் புன்னகையில் என்னக்கிள்ளி
மலையழகி மதிபோலக் கிளம்பி வாறா
மனச மயக்கியே மகிழ்ச்சி தாறா
கரிசல் காட்டுக் கன்னிப் பெண்ணே
களையெடுக்க வந்த சின்னப்பெண்ணே
களையெடுத்தே எம்மனசக் கலச்சாயே
சிவப்பான இதழினிலே
செந்தேனைக் கொண்டவளே
சிலைபோல அழகினிலே
சிற்றிதயம் கொன்றவளே
கண்ணாடி வளையலோ
கண்ணைப் பறிக்குதடி
கருகுமணி மாலையோ
கழுத்துக்குப் பொருந்துதடி
சின்னக்கையாலே
செம்பருத்தி வேலை செய்ய
சிவந்தே கண்டித்தான்
நோக்காடு வந்திடுமோ







# 17. அகவை தின வாழ்த்து

அகவை பதினொன்றில்
அடியெடுத்து வைக்கும்
அழகி அவள்
ஐயிரண்டு மாதங்கள்
தவமிருந்து பெற்ற
அன்பு மகள்
குதித்து ஓடுவதில்
புள்ளிமான் தோற்றுப்போகும்
அருவியோ அவளைப் பார்த்து
ஆடிப்போகும்
செல்ல மகள் அழகினிலே
செந்தாமரையும் கூம்பிப் போகும்
பைங்கிளியோ பாவை காணவே
வாடிப் போகும்
கண்களை விரித்துக்
கதைகள் பேசியே
கனவுலகம் சென்று வர
வானவில் தருவாள்
சிருங்காரச் சிரிப்பினில்
சிந்தையை மயக்கியே
செந்தேன் பொழிவாள்
மகளே, மணியே,
மனம் மகிழ்விக்க வந்தவளே
இதழ் சேர்த்து என்னை
அம்மா என்று அழைக்கையிலே
இமைக்க மறந்து

அமுதே உன்னை நோக்குகிறேன்
பிறவிப் பயனை
நானோ அடைகிறேன்
சிற்பம் நீ வாழ்வில்
சிறக்க வேண்டும்
சிகரம் தொட்டுச்
சாதனைகள் படைக்க வேண்டும்
நுட்பங்கள் கற்று
நூதனங்கள்
அறிந்திட வேண்டும்
நீடூழி நிறைவாக
வாழ்ந்திட வேண்டும்
ஈன்ற பொழுதை விட
பெரிதுவக்கும் தாய்
நானாக வேண்டும்
புகழ் ஏணியில்
நீ ஏற வேண்டும்
புடை சூழ வாழ்த்தொலிகள்
வர வேண்டும்
இந்நன்னாளில் உயிரே
உன் தாய் வாழ்த்துகிறேன்
வளம் பெற வேண்டுமென்று
இறையோனை வேண்டுகிறேன்






## 18. அறிவால் அறிவாய் உன்னை

கல்வியைத் தலையாய
கருப்பொருளாய் எடுத்து
கற்றிடவே கவனமாய்
உன்னை வழிநடத்தும்
பெற்ற ஞானத்தைப்
பெரும்பேறாய்ப் பேணி
பாருனைப் போற்றவே
உனை அறிவாய்
கரையில்லாத வாசிப்பும்
கருத்துக்களின் தேடலும்
கருவியாக மாறியே
சமூகப்பணி செய்யும்
வயதும் இல்லை,
வரம்பும் இல்லை
குழவி முதல் இறுதிவரை
தொடருமே கற்றல்
தூர்வாருமே மடமையை
உலகை மாற்றும்
சக்தியான ஆயுதம்
மரத்தின் வேராய்
மனிதனுக்குப் பலமே
படிக்கின்ற அறிவு
பாதையைக் காட்டுமே
பண்பை வளர்த்துப்

படித்தரம் கூட்டுமே
நன்மதிப்புகள் உயர்ந்து
வாழ்க்கை மேம்படுமே
வரங்கள் பெற்றுத்
தரங்கள் உயரவே
விலையில்லா அறிவை
விரும்பித் தேடு







## 19. இளந்தளிரே இருளில் மூழ்காதே

சின்னஞ் சிறுவர் எல்லோரும்
குடும்பந் தழைக்க வந்தவராம்
கன்னமிட்டு அவர் மனத்தை
கடிந்து கொள்ளக் கூடாது
எதிர்காலத்தில் எம்புகழை
எடுத்துச் சொல்லும் ஏந்திழைகள்
ஏடுகள் எடுத்துப்படித்தே
எதிர்காலத்தை வெல்பவர்
ஊஞ்சலாடியே உவகையோடு
கவலையின்றிச் சிரிப்பவர்
ஊரறியத் தலைவர்களாய் நாளை
உருவெடுக்க வந்தவர்
துஷ்பிரயோகத்திற்கு ஆளாகாமல்
துணிந்து தடுத்திடுவோம்
தூரம் ஆகாமல் நம்மோடு
சேர்த்தே வாழ்ந்திடுவோம்
தனிமையிலே துவண்டிடாமல்
தங்கமெனக் காத்திடுவோம்
மனவலிமை பெற்றிடவே
ஊக்கம் கொடுத்திடுவோம்
இணைய அடிமையாதலைத்
அடியோடு துடைத்திடுவோம்
இறை நம்பிக்கையை
ஊட்டியே வளர்த்திடுவோம்

தூரநோக்கோடு கல்விதனைக்
கற்கத் தூண்டிடுவோம்
தட்டிக் கொடுத்தே திறமைதனை ஊக்குவித்திடுவோம்
ஆபாசக்கயவரிடமிருந்து
ஆகவும் கவனமாய் காத்திடுவோம்
பாலியல் வன்முறைதனைப்
பலமாகவே தடுத்திடுவோம்
அன்பாய் அரவணைத்து
அருங்கதைகள் சொல்லிடுவோம்
அவனியிலே சாதனைகள் புரிந்திடவே
ஏது செய்வோம்





## 20. மஞ்சக் காட்டு மைனா
## கொஞ்சிப் பேசிப் போனா

ஏரிக்கரை ஓரத்திலே
ஏம்மனசப் பறிச்சவளே
எழிலோடு ஒயிலாக
உரசித்தான் போறவளே
மஞ்சள் பட்டுடுத்தி
மனசத்தான் மயக்கிப்புட்ட
மயக்கும் விழியாலே
மாமனத்தான் சாச்சுப்புட்ட
பைந்தமிழ் மொழியால
பைத்தியமாப் போனேன்டி
பளபளக்கும் இதழால
பரிதவிக்க வெச்சிட்டியே
கோலமயில் பேரழகே,
கொடியிடையின் நூலழகே
அன்னநடை நடந்து
அழகுராணி போகையிலே
அண்ணாந்தே நானும்
அசந்துபோயிப் பாக்கிறேனே
அலையாத மனசுக்குள்ள
அலையடிச்சுப் போறபுள்ள
செக்கச் செவேலென்று
சிவந்திருக்கும் முகத்தழகி
செங்கரும்பு வாயாலே
சொக்கத்தான் வைக்கிறியே

## 21. தன்முனைக்கவிதைகள்


கிளிஞ்சல்களாய் என் காதல்
குவிந்து கரையொதுங்குகிறது
தொட்டும் தொடாமலும்
விட்டுச் செல்கிறாய் அலையாக


உனை அர்ச்சிக்கும் கவிதைகள்
ஆக்ராக்கள் ஆகின்றன
வீற்றிருக்கும் எழுத்துக்கள்
உனக்கான தாஜ்மஹால்கள்

வயிறு நிறைய
வெள்ளிகள் சேர்க்கிறேன்
கடைசியில் நானொரு செல்லாக்காசு
உடைந்த உண்டியல்

துரத்தியே களைத்துப் போனோம்
வட்டப்பாதையில்
முடிவில்லாவோட்டம்
சுவர்க்கடிகாரம்

கறுப்புக்கம்பளத்தில்
சிதறிக்கிடக்கின்றன
சில்லறைக்காசுகள்
இரவு வானில் விண்மீன்கள்





## 22. நமக்கான கவிதை...

கவிதை என்றால் அழகியல்...
அழகியல் எல்லாம் கவிதை...
இயற்கை எழுதிய கவிதை – காடு...
காடு எழுதும் கவிதை – பசுமை...


மேகம் எழுதிய கவிதை – மழை...
மழை எழுதும் கவிதை – வானவில்...
இரவு எழுதிய கவிதை – நிலவு...
நிலவு எழுதும் கவிதை – பௌர்ணமி...


மலைகள் எழுதிய கவிதை – நதிகள்...
நதிகள் எழுதும் கவிதை – சமுத்திரம்...
மரங்கள் எழுதிய கவிதை – மலர்கள்...
மலர்கள் எழுதும் கவிதை தேனமுதம்...

சூரியன் எழுதிய கவிதை – வெய்யில்...
வெய்யில் எழுதும் கவிதை – வெப்பம்...
சிப்பி எழுதிய கவிதை–முத்து...
முத்துக்கள் எழுதும் கவிதை மாலை...

காற்று எழுதிய கவிதை – தென்றல்...
தென்றல் எழுதும் கவிதை – ஸ்பரிஷம்...
மூங்கில் எழுதிய கவிதை – புல்லாங்குழல்...
புல்லாங்குழல் எழுதும் கவிதை – குழலோசை

உள்ளங்கள் எழுதும் கவிதை – காதல்...
காதல் எழுதும் கவிதை – கண்ணீர்...
கடவுள் எழுதிய கவிதை – அன்னை...
அன்னை எழுதும் கவிதை – தாலாட்டு...
இதழ்கள் எழுதிய கவிதை – முத்தம்...
முத்தம் எழுதும் கவிதை – மோகம்...





## 23. பெண்ணியம் போற்றுவோம்

பெண்ணாய்ப் பிறந்தது பெரும்பேறே அறிவீர்
பேருலகம் தன் கையால் நெறிப்படுத்தும் கருவி
தன்னலமின்றித் தயவோடு
உழைப்பவள் அவளே
தளராத நம்பிக்கையில் ஒளிரும் தாரகை
அன்பு மழையால் ஆட்டிப் படைப்பாள்
கோபப் புயலாய் மாறவும் செய்வாள்
இயற்கையின் சக்தி இயல்பாய்க் கொண்டவள்
மலையின் உறுதி மனத்தில் நிறுத்தியவள்
தாயாய் மனைவியாய் மாற்றம் கொள்பவள்
உலகமே இயங்கும் பெண்மையின் ஆட்சியில்
உன்னத வாழ்வின் ஆணிவேர் அவள்தான்
வீடும் நாடும் போற்ற வாழ்வாள்
துறைகள் தாண்டிச் சாதனை புரிவாள்
மிளிரும் அழகில் தேவதைகள் தோற்கும்
துளியும் குறையாத் தியாகத்தின் இருப்பிடம்
பொறுமையில் பூமியை மிஞ்சும் அரசி
பூவுலகிற்குக் கிடைத்த அதிசய பரிசு
வெறும் போகப்பொருள் அல்லவே பெண்கள்
போற்றுதற்குரிய செல்வமாய்க் கொண்டாடுதல் நன்றே

## 24. பிரியமுடன்


பள்ளி நினைவுகள்...
மீட்கையில்–மனம்
சில்லிடுகிறது
ஏதோவொரு வேதனைக் கீறல்...


வாழ்க்கையின்
ஈர விலாசங்களில்–நட்பென்பது
நந்தவனம்...

நினைவுக் கீற்றுகள்
நெருஞ்சியும் நல்லமுதும்
கலந்த இன்ப வேதனை...

முற்றத்து நிலா பார்த்தமரும்
வழக்கமான பொழுதுகளில்
நாம் பேசிக் கொண்டவை
யாவும் காதோரம் கிசுகிசுப்பாய்...

கல்விக்காய் கடுகதி அவசரத்தில்–நாம்
முண்டியடித்ததுவும்...
மூச்சுத் திணறியதும்...
மறந்திடுமோ? மனதை விட்டகன்றிடுமோ...?





அத்தனை வேதனைகளையும்
நம்–அரட்டை, சேட்டைகளால்
அந்த நொடிப்பொழுதில்
மறந்திடுவோம்...

எம் நீண்ட பயணத்தின்
மைல் கற்களாய்
மனதிலூன்றி விட்டன – நம்
பள்ளி நாட்கள்...


எத்தனை ஆர்ப்பாட்டங்கள்...
வெற்றிகள், தோல்விகள்...
வேதனைகள், விமர்சனங்கள்...
நட்பின் வேதத்தில்!


அதற்குள் பிரியா விடை!
மனது அமைதியாய் சஞ்சலப் படுகிறது...
உதடுகள் – ஓங்கார
ஓசையெழுப்பத் துடிக்கின்றன...
ஆனால் – மௌனம்தான்
அங்கு ஆட்சியமைக்கின்றது!

நட்பே...
உன் முயற்சிகள் சறுக்கலாம்...
விடாமுயற்சிகள் ஒரு போதும்
தோற்றதில்லை!
இடியா மனதுடன் – நீ
விடியா இரவுகளோடு

போராடினால் – உன்
சோலைவனத்தில் சோபிதம்
துளிர்க்கும்...

இனிமேல்
வாழ்வின் பாதையில்
எந்தச் சந்தியிலேனும்
எப்படியோ, எப்போதோ
சந்திப்போம் – என்ற நம்பிக்கையில்
வெளிச்சுவாசம் – நான்
விலகிப் போகிறேன்...





## 25. ஹைக்கூ கவிதைகள்

பச்சை வயல்
இதமாக இருக்கும்
வாய்க்கால் நீரோசை

செழித்த கழனி
படிந்து கிடக்கும்
முற்றிய கதிர்கள்

கார்முகில்
மகிழ்ச்சியில் திளைக்கும்
காட்டு மயில்

மலையடிவாரம் அலை
அடித்துக் கொண்டிருக்கிறது
வேகமான காற்று

புற்றரை
செழித்திருக்கிறது
கரையோர மரம்

மழை பெய்யும்
இரைச்சல் கேட்கிறது
நனைந்த பறவைகள்

பச்சைப் புற்றரை
நிலத்தைப் போர்த்தியிருக்கிறது
பனிமூட்டம்

காடழிப்பு
நடமாட்டம் குறைகிறது
சிட்டுக்குருவிகள்

## 26. மா... ரணம்


மரணம்...
நினைக்கையில்
மகா ரணம்
நெஞ்சினில்...


யாவரும்
ஒரு நாள்
அந்த ஓடத்தில்
ஏறத்தானே வேண்டும்...

பாமரனும், படித்தவனும்
ஏழையும், பணக்காரனும்
பாரினில் யார் தப்பினார்?
கூற்றுவனின் குரங்குப் பிடியில்...

வயது முதிர்ந்தாலும்
வயதிருந்தாலும்
வந்துதானே தீருவான்
காலன்–உன் காலடியில்...

சொந்தங்களை மறந்து
சுற்றங்களைப் பிரிந்து
வாழ்ந்த மண்ணிழந்து
சகலமும் துறந்து...
ஆறடி மண்ணே–உன்
ஆறுதலென ஆகும்...







இயந்திர உலகின்
இறுக்கமில்லை...
பொறாமையில்லை
பித்தலாட்டமில்லை...
வஞ்சனையில்லை
நிந்தனையில்லை...

ஆசுவாசமாய்
ஆறுதலாய்
அமைதியான
உறக்கத்தில் நீ...

## 27. மயங்கினேன் சொல்லத் தயங்கினேன்

விழிகளுக்கு விருந்தாய் அரும்பே மலர்ந்தாய்
விண்மதி ஒளியெனக் கண்ணில் படர்ந்தாய்
விடியலின் கதிராக பிரகாசம் தந்தாய்
விதையென விழுந்து காதலை விதைத்தாய்
முகம் பார்த்து மொழிகள் மறந்தேனே
தலை குனிந்த அழகில் தடுமாறினேனே
மயங்கினேன் காதல் சொல்லத் தயங்கினேன்
கிறங்கினேன் உயிரோடு இணையவே விரும்பினேன்
திரும்பினேன் உன்பால் தளும்பியே தவிக்கிறேன்
தொலைகிறேன் உன்னில் வார்த்தைகளின்றி
ஊமையாகிறேன்
நீ இல்லாமல் நினைவுகளோ பாரமானதே
மாயங்கள் செய்தே என்னைக் கொய்தாய்





## 28. வாழும் வரைப் போராடு

வாழும் வரை நீ போராடு
வாட்டும் துன்பங்கள் தீர்க்கவே ஓடு
வாழ்க்கையில் வெல்லவே கல்விதனைத் தேடு
வானம் தொட்டு விடவே நாடு
வாழ்வாங்கு வாழ்ந்திடவே வேதம் ஓது
வாடாத மலரெனவே மணம் வீசிடு
வாய்மை தவறாமல் நாளாந்தம் ஒழுகிடு
வானவில் வண்ணமென அழகாய் ஒளி வீசிடு
வஞ்சகம் இன்றியே வணிகம் செய்திடு
பிறர் வறுமை போக்கிடவே பாடுபடு
விடாமல் முயற்சிதனை விழுதுகளாகித் தொடு
வாழ்த்துக்கள் மழையாகிப் பொழியுமே உன்னோடு

## 29. சென்றியு துளிகள்

பழைய நினைவு
திரும்பி வருகிறது
நண்பனின் கைப்பேசி அழைப்பு


சாட்சியற்ற வழக்குகள்
தள்ளுபடியாகின்றன
நகைக்கடன்கள்


ஒரு பிடி சாம்பல்
கடைசியில் மிஞ்சுகிறது
வாட்டும் தனிமை

அரசின் சூட்சுமம்
எரிவாயு விலை ஏறுகிறது
பயன்பாட்டில் விறகடுப்பு

ஊனமுற்ற குழந்தை
தத்தித் தத்தி நடக்கிறது
தரையில் வாத்து

நவீன மருத்துவம்
பக்கவிளைவு அதிகரிக்கிறது
பொதி செய்யப்பட்ட உணவுகள்





## 30. தேவதையும் மகளும்...

தேவதையும் மகளும்
ஒன்றாகவே பிறந்தனர்
ஆயினும் பிரித்தறியப்
பெரும் பிரயத்தனம் வேண்டும்

சிரிக்கும் போதினில்
தேவதை தோற்கிறாள்
அழும் போதிலும்
அவளே வெல்கிறாள்

செந்தேன் மொழியைத்
தேவதை கற்பித்தாளோ
சிணுங்கல் ஒலியை
யாரிடம் கற்றாளோ

செல்லப் பிடிவாதத்தில்
சொக்கும் தேவதை
கன்னக்குழியில் என்னை
வீழ்த்தும் கவிதை

அள்ளக் குறையா
எழிலுடன் பிறந்தவள்
ஆசை தீரவே
மடியில் வாழ்பவள்


கோபிக்கும் அழகோ
கோடி ரூபாய் பெறும்
பிரஸ்தாபிக்கும் தோரணையில்
பிரளயம் உருவாகும்


சில்மிஷங்கள் செய்யும்
சில்வண்டின் ரீங்காரமோ
செந்தாமரைகள் கொண்டு செய்த
சந்தனச்சிற்பத்தின் சாயலோ?

சிறகின்றிய தேவதையோ
சுற்றுகின்ற ராட்டினமோ
சந்திரனும் சூரியனும்
சேர்ந்தே இருக்கின்ற
இந்திரலோகமோ?

தேவதைகளின் சிறகாய்
மாறிப்போய் விட்டாளோ
தேவகானம் சொட்டும்
செவ்விதழ் உனதோ?

வரிகள் மாலையெனக்
கழுத்தில் சுமந்த ராணி
இதய சிம்மாசனத்தில்
அமர்ந்திருக்கும் இளவரசி
சிறகடிக்கும் சின்னச் சிட்டு
மலருகின்ற மல்லிகை மொட்டு
திங்களாய் ஒளிரும் மென்பட்டு
தழுவிடவா சின்னப் பாதங்களைத் தொட்டு





என் ராஜ்யத்தில் அதிகாரக்
குரல் எழுப்பும் ராட்சசியோ
ரங்கோலிக் கோலமோ
ராகங்களின் கூட்டணியோ


சராமாரியாய்ச் சந்தேகங்கள்
பெருவாரியான கேள்விகள்
அவிழாத முடிச்சுக்கள்
அகலாத கொள்ளைச் சுகங்கள்


தேவதையும் மகளும்
ஒன்றாகவே பிறந்தனர் ஆயினும்
பிரித்தறியப் பெரும்
பிரயத்தனம் வேண்டும்

## 31. மனசெல்லாம் நெறைஞ்சவளே

### (கிராமியம் மணக்கும் கவிதை)

மனையாளா வந்தவளே
மடிமீது சாய்ஞ்சவளே
மயிலிறகுக் கையால
வருடித்தான் போறபுள்ள
மந்தகாசப் புன்னகையில்
மனசத்தான் நிறைச்சிப்புட்ட
சிறுத்த இடையால
அடிமனசச் சாய்ச்சுப்புட்ட
மலர்மேனி நோகக்
குடம் சுமந்து
மணவாட்டி நீ
அசஞ்சு போகையிலே
மண் குடத்துத்
தண்ணிபோல ஏம்மனசு
தளம்பித்தான் தவிக்குதடி
தலையெல்லாம் சுத்துதடி





## 32. சின்னஞ்சிறு சிட்டுக்கள் நாம்

சின்னஞ்சிறார் நாம் சிறப்புடன் வாழச்
சீரிய கல்வி பெற்றிடுவோமே!!
நாளைய உலகம் நமதென்றே
நன்றாய் உரைத்திடுவோமே!!

பண்போடு பெற்றவருக்குப்
பணிவிடைகள் செய்திடுவோமே!!
அன்போடு ஆசிரியரின்
அடியொற்றி வாழ்ந்திடுவோமே!!

நெறியோடு கூடிய
உலகஅறிவு பெற்றிடுவோமே!!
ஒழுக்கம் ஓம்பியே
நன்மதிப்புகள் சேர்த்திடுவோமே!!

வீரத்தோடு வீறாப்பாய் வாழ
வேண்டிக்கொள்வோமே!!
வேகத்தோடு வெற்றிகளைத்
தட்டிக்கொள்வோமே!!

பாலர் நாம் பாடிப்
பாசத்துடன் பழகிடுவோமே!!
பால் போன்ற மனத்தூய்மையுடன்
இறைவனைத்தொழுதிடுவோமே!!


சுட்டெரிக்கும் சூரியனாய்க்
கெட்டவைகள் வெறுத்திடுவோமே!!
சூழலை நாம் மாசடையாமல்
சுத்தமாய் வைத்திடுவோமே!!

சோம்பலின்றி எறும்புகள் போல்
சுறுசுறுப்பாயோடிடுவோமே!!
சோர்ந்திடாமல் சாதனைகள்
செய்திடச் சபதமெடுப்போமே!!


சட்டம் பேணிச்சகத்தினிலே
சமத்துவமாய் வாழ்ந்திடுவோமே!!
சாந்தியெனும் வேதம்
வளர உழைத்திடுவோமே!!

கல்வியிலே கரை காணக்
கடிதாய் உழைத்திடுவோமே!!
எல்லையில்லாக் கடல் போல
எமதறிவை வளர்த்திடுவோமே!!

மாணவர் நாம் ஓர் நாளில்
மாதலைவர் ஆகிடலாமறிவோமே!!
விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் வளர்த்து
நம் நாட்டை உயர்த்திடுவோமே!!




## 33. விட்டுப்போன சொந்தங்கள்




பணம் இருந்தால்
பார் போற்றும்
புடை சூழச்
சனம் இருக்கும்
விலை போன
வீணான பூமியிலே
குணமிருந்து
கொஞ்சமும் பயனில்லை
மனம்போலே
வாழ்கிறார் மனிதர்
உறவு துறந்தே
ஓடி ஒழிகிறார்
விட்டுப்போன
சொந்தங்களைத் தேடாதே
தட்டழிந்து போகாமல்
தேவன் காப்பான்
தரணியில் நன்றாய்த்
தடம் ஊன்றியே
தலை நிமிர்ந்து
தைரியமாய் வாழ்ந்திடவே
தன்னம்பிக்கையே
தலையாய ஒரே வழி
தளராமல் வாழ்க்கையில்
தனித்துவமாய் நடந்திடுக

## 34. கனவு மெய்ப்பட வேண்டும்!

கனவு மெய்ப்பட வேண்டும்
காரியங்கள் கைகூட வேண்டும்
கடிதாய் உழைத்துக்
கரை சேரவே
கங்கணங் கட்டிக்
களமிறங்கு
கற்கள் நிறைந்த
வாழ்க்கைப் பாதையிலே
காத்திரமாய்ச் சுவடுகள்
பதித்து விடு
கண்ட கனவு
கச்சிதமாய் நிறைவேறவே
கடவுள் பொழிவார்
அருள் வாழ்த்து





## 35. பொறுமை

பொறுமை ஒருபோதும்
தோற்பதில்லை.
சினத்தால் வென்றார்
யாருமில்லை.
பணம், பட்டம்
பதவியெல்லாமே
பாரினில் நீ பெற்றாலும்
பொறுமை இன்றியே
யாதொரு பலனுமில்லை
ஆணவம் ஆத்திரம் களைந்து,
பக்குவம் பண்பாடு வளர்த்து,
பொறுமை காத்திடும் பண்பே
பெருமை தந்திடும் மாண்பு!
சாந்தியை நெஞ்சினில் ஏற்றி
பெருநீதியைப் பாரினில் போற்றி
சஞ்சலம் தந்திடும்
தீமையை அகற்றி
பெருவாழ்வு வாழ்ந்திடுவோம்
உளந் தேற்றி


## 36. இவை போதும் எனக்கு...


பிடித்த வேலை
கொஞ்சம் பாராட்டு
நிறைய நிம்மதி
நீடித்த நட்பு
வாழ்வில் வேண்டும் எனக்கு

கொஞ்சம் தேநீர்
நிறையப் புத்தகங்கள்
மெல்லிசை அருவி
திறந்த புல்வெளி
திகட்டாமல் வேண்டும் எனக்கு

கண் நிறையத் தூக்கம்
கனவெல்லாம் இன்பம்
கலையாத அமைதி
கடவுள் அருள்
கட்டாயம் வேண்டும் எனக்கு

சுமை இல்லாத வாழ்வு
சுரண்டல் இல்லா மனிதர்கள்
சுட்டித்தனங்கள்
சுகமான தேகம்
சத்தியமாய் வேண்டும் எனக்கு





நிறைய மரங்கள்
நிர்ச்சலனமான குளங்கள்
நீந்தும் மீன்கள்
நீரின் அலைகள்
கண்ணாரப் பார்க்க வேண்டும் எனக்கு


சிடுசிடுத்த மழை
சிலந்திவலை
சில்லூறின் ஓசை
சிறகுலர்த்தும் பறவை
ரசிக்க வேண்டும் எனக்கு


மன்னிக்கும் மனம்
மட்டிலா அன்பு
மகிழும் இல்லம்
மழலை மொழி
மனதார வேண்டும் எனக்கு

இவை போதும் எனக்கு...
இவை போதும் எனக்கு...

## 37. விவசாயி வாழ்வு

பச்சை வயல் சுற்றியிருக்க
மத்தியில் எந்தன் குடிசை இருக்கு
பசுவும் கன்றும் புல் மேய
பாலும் கொஞ்சம் எனக்கு இருக்கு
முன்னே கிணற்றில் தூய நீரும்
மனம் கிறங்கும் தென்றல் காற்றும்
தினமும் எந்தன் வீடு வரும்
திகட்டாமல் வாழ்வு வளம் பெறும்
அருகில் ஓடை நீரோ சலசலக்க
கெண்டை மீன்கள் அதிலே துள்ளிக்குதிக்க
சுறுசுறுப்பாய் நாளும் சென்றிடுதே
சோம்பேறித்தனமும் உடலை விட்டு அகன்றிடுதே
மண்வெட்டி கொண்டு மண்ணைக் கொத்தி
மாபெரும் உழவைத் தொழிலாய்க் கொண்டோம்
சுடச்சுட சோறும் மீன் குழம்பும்
மிடறாய் விழுங்க இஞ்சித்தேநீரும்
பட்டணத்தில் நீங்கள் பார்த்ததுண்டா
பணத்தைக் கொட்டினாலும் கிடைத்திடுமா?
இங்கே இருக்கும் இந்த இனிமை
இன்பம் விளையும் வயலோர வாழ்க்கை
செலவின்றிச் சுகமாய் ஒன்றி வாழ்ந்திடவே
சத்தான இயற்கை சுற்றிலும் இருக்கு
சாகசங்கள் நிகழும் இந்த மண்ணே
சந்தோஷம் தரும் உந்துதல் எமக்கு





## 38. தன்முனைக் கவிதைகள்

கடலலையாய்
முத்தமிட்டுச் செல்கிறாய்
நிலமாய் உன்னோடு
சங்கமிக்கிறேன்

அடம் பிடித்துப்
புலம்பும் அலையாகிறேன்
எப்போது வருவாய்
கால்நனைக்க

காற்றாகிக் கீதம் இசைக்கையில்
இசைந்து அசைந்தாடு
கொஞ்சமேனும் என்னோடு
மரங்களைப் போல

விரல் கொண்டு மூடினாலும்
இசையாய் வெளிப்படுகிறேன்
உன்னிதயப் புல்லாங்குழலுக்குள்
நுழைந்த காற்று நான்

புலனமோ முகப்புத்தகமோ
தேவை இல்லை பெண்ணே
காதல் பார்வை போதுமடி
நான் காலந்தள்ள

## 39. நாட்டார் பாடல்


முக்காடு போட்டவளே
முழுமதியை மறைச்சவளே...
முயன்று நிதம் தோத்தேனே
உன்முகம் பார்க்கத்துடிச்சேனே


முன்னோக்கிப் போற மச்சான்
முழுமதி பாக்க துடிக்கும் மச்சான்
கண்ண மட்டும் பார்த்து என்னக்
கண்டு பிடிக்க மாட்டீகளா

காத்தாட ஆத்துப்பக்கம்
ராத்தாவோட போற புள்ள
காத்திருந்து காத்திருந்து
கண்ணிரண்டுங் கடுக்குதடி

கடுகதியில் பாக்கணுமா
கலியாணம் பண்ணனுமா
கண்ண மூடிப்படுங்க மச்சான் உங்க
கண்களுக்குள் நானிருப்பேன்.

தாவணிப் பறவ படபடக்கத்
தாவித்தாவிப் போறவளே
தண்ணி வண்ணி இல்லாமல்
நான் தவிக்கிறது தெரியலியோ





தயங்கி நின்னு ஒருதரக்கா
பாத்திடத்தான் நாந்துடிக்கன்
தாகம் தீரக் குடிக்கத்தான்
தண்ணி போல வாங்க அத்தான்

உத்து உத்துப் பார்ப்பவளே
ஊரூராய்த் திரிபவளே
என்னை மட்டும் தனியா விட்டுட்டு
எங்கம்மா நீ போற?

உத்து உத்துப் பார்ப்பதெல்லாம்
உங்களைத்தான் தேடி மச்சான்
தில்லிக்குத்தான் போனாலும்
என்னத் தேடி ஓடி வருவீக

மஞ்சள் நிறத்தழகி
மாம்பழத்து மணத்தழகி
மன்னவனை நீ மணந்திடனும்
மறுவாத்தி அவ்வளவுதான்

மதன உடலழகா
மக்கத்துப் பேரழகா
மனசுக்குள்ள உன்ன வச்சு
மறுதலிச்சி நான் கிடக்கன்

கொச்சிச்சொண்டழகி
கோதுமைமாச் சொக்கழகி
கெஞ்சிக் கூத்தாடி நான் கேட்பதெல்லாம்
உன் நெஞ்சம் எனும் கோட்டையடி

கோட்டைக்குள் வந்த கொற்றவனே
கொஞ்சிக் கொஞ்சிக் குழைபவனே
ஓதி வச்ச கல்லப் போல
ஒங்க நினைவோட நானிருக்கன்


கூர்மையான மூக்கழகி
கேரளத்துப்பல்லழகி என்
கேள்விக்கொப்பாட்டிக்
கொள்வினைதான் ஆனவழி

முகலாய மன்னவரே
முறைமாமன் ஆனவரே
முந்திரிக்கொட்ட போல நீங்க
முந்திக்கிட்டு நிப்பதென்ன

முறப்பொண்ண சேர்ந்திடவே
முந்திக்கிட்டு நிக்கம் புள்ள
மறந்துங்கூட யாருக்கும் நீ
ஓம்படுதல் கூடாது

அடுத்தவங்க கத கேட்டு
அழுது நீங்க புலம்பாதீக
பெத்தவங்க ஒத்துவராம
கதவடிக்கும் வரமாட்டேன்





## 40. நாதமியற்றும் நதி

இயற்கை தந்த அழகான ஈரம்
ஏரியின் கரைகளில் நனையுது மரம்
தெளிந்த நீரோ ஓடிப் போகுது
குளித்திடவே அதிலே ஆசை வருகுது

அருவியின் நாதம் இன்பம் தருகுது
ஆனந்த வெள்ளமோ இங்கே பாய்வது?
தென்றல் காற்று மேனியைத் தழுவுது
மெத்தென்ற சருகுகளும் இன்பம் தருகுது

பச்சைக் காடும் பாறைக் கற்களும்
பண்ணிசைக்கும் பறவைக் கூட்டங்களும்
பார்க்கவே பசுமையாய்க் கண்கள் குளிருது
இதமாய் இதயமும் களிப்பில் துள்ளுது

குருத்து மண்ணும் கூழாங்கற்களும்
கருத்த மலையும் விரிந்த வானமும்
பார்த்திடப் பரவசம் பாங்காய் வருகுது
அண்டியே வாழ்ந்திட எண்ணம் எழுகுது

மன்மத அழகினில் மனதும் மயங்குது
உன்னத இயற்கை உற்சாகம் தருகுது

## 41. அந்தாதிக் கவிதை - ஆடும் கூடுகளே

ஆடும் கூடுகள்
அன்பின் உழைப்பினிலே

உழைப்பின் உன்னதமாய்
உருவான இல்லங்களே

இல்லங்களின் நேர்த்தி
அழகியலின் கீர்த்தியே


கீர்த்தியோடு இணைந்திடும்
சோடிப் பறவைகளே


பறவைகள் கூட்டமாய்
கூடியே வாழ்ந்திடுமே

வாழ்ந்திட வந்திடும்
இனங்களின் பெருக்கமே

பெருகிட இயற்கையோ
உயிர்த்திடும் அதிசயமே

அதிசயத்தின் உச்சமாய்
ஆடும் கூடுகளே







## 42. முகமூடி

உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசுவான்
உதட்டினிலே தேனைத்தான்
மெதுவாகப் பூசுவான்
கண்கள் இரண்டினில்
சாந்தம் குடியிருக்கும்
கருநாகம் ஒன்று
நெஞ்சத்தில் சுருண்டிருக்கும்
முகமூடி போட்டிருக்கும்
மானிடரை நம்பாதே
முன்னெச்சரிக்கை வேண்டும்
மனதில், வெம்பாதே
சால வித்தைக்காரன்
சாடியே பேசுகின்ற சாகசக்காரன்
சத்தமின்றிச் சகலதும் நடக்கும்
மெதுவாகப் பனிப்போர்
அரங்கேறி இருக்கும்
காரியத்தில் கண்ணாய் இருப்பான்
கண்ணைத் திறக்குமுன்னமே
கசக்கி எறிவான்
எதிரியை விட மோசமானவன்
ஏமாற்றுகின்ற அசகாய சூரன்
போலித்தனத்தின் எடுத்துக்காட்டு
புத்தியுடன் மாந்தர் நடப்பதே தேட்டு

## 43. கார்கால மேகமே

வானமகள் நாணி
இருளைப் போர்த்துகின்றாளே
கோலமயில் தோகைதனை
விரித்தாடுதே களித்தே
கண்ணைச் சிமிட்டும்
மின்னலின் கொடியே
கொட்டும் மேளமாய்
இடியும் முழங்குமே
கார்கால மேகமே
குளிருதே தேகமே
கனிந்தே தருவாய்
பொன்னான தூறலே
தீருதே உன்னால்
வரட்சியின் தாகமே
மாறுதே கழனி
பசுமையின் தூபமே
காதலோடு பூமியைத்
தழுவுகிறாய் ஆசையில்
காந்தள் மலர்களும்
ஆடுதே மகிழ்ச்சியில்
பொன்னான மழையே
போற்றுகிறோம் உனையே
திண்ணமாய் உந்தன்
வள்ளன்மை பெரிதே





## 44. தூளியிலே தூதுணம்...

தூளி கட்டி ஆட வந்த
சின்னப் புள்ளினமோ?
தொங்கும் கூட்டில்
உந்தன் வாழ்விடமோ?

பட்டம் பெறாத
பொறியியலாளன் நீயோ?
கட்டுமானப் பணியில்
கைதேர்ந்தவன் நீயோ?

அறைகள் கொண்ட வீடும்
அழகான வாசலும்
அமைக்க இறைவன்
உனக்கு அருளினானோ?


மெல்லிய நாரினை
அலகால் கிளித்து
முடிச்சுகள் பல போட்டாயோ?
மின்மினி கொண்டு உன் வீட்டை
ஒளியூட்ட விரும்பினாயோ?


திசையை நோக்கும்
உந்தன் கூடு
தீவிரமாய்க் கணிக்கிறாய்
குருவியே மழையின் பேறு
மஞ்சள் ஊர்க்குருவியே...
மதி மயங்குகிறோம்
உனைக் காணவே...
மென்பஞ்சுடல் மேனியில்
மெத்தென்றிருக்கும் குருவியே...

அந்தரத்தில் ஆடும்
சுந்தர இல்லத்தில்
சொகுசாய் ஓய்வெடுப்பாயோ?
சந்ததி வளர்க்கவே
உனக்கொரு வாழ்விடம்
சரியாகச் செய்தாயோ?

மந்திரம் போல உன் வீடு
மாந்தருக்கோர் அழகிய சான்று...
தூளியில் ஆடும் தூதுணமே...
தொட்டில் கட்டும் கின்னகமே

என்னே உந்தன் அழகு...
அழகியல் திறனே
உந்தன் கூடு...





# 45. ஆறாம் விரல்

உருளை வடிவில் உயிர்கொல்லும் போதை
காலன் வீற்றிருக்கும் காகிதக்கப்பல்
விரலிடுக்கில் வெற்றிக்களிப்பில் எரியும்
மெல்ல மானிடரை
மரண மேடையேற்றும்

அடிக்கடி அணியச் சொல்லி ஆசையூட்டும்
அழைத்து அடிமையாக்கி ஆளைக் கொல்லும்
அக்கினிக் குஞ்சு
அழித்திடும் மானிடக்காடுகளை
வக்கிரமாய் வாதைகள் பல செய்தே வதைத்திடும்


வாழ்க்கை மொத்தத்தையும்
எரித்திடும் நெருப்புக் கங்கு
வாயில் வைத்துறிஞ்சி
ஊதி விடுகையில்
பயணம் செய்து
அடைந்திடும் அதலபாதாளம்
நுரையீரல் மொத்தத்தையும் மூடியே நிறைத்திடும்

பல்வகை நச்சையும்
வாரியே இறைத்திடும்
நச்சுவிரசாயனங்கள், தீங்குலோகங்கள் இரத்தத்தில்
இழையோடியே வீரமாய்க் கோரங்கள் செய்திடும்
புற்றுநோயும் இரத்தவழுத்தமும்
புரையோடியே கொன்றிடும்
ஆஸ்துமாவும் பார்வைக் குறையும் கூடியே போகும்

நோயெதிர்ப்பே துளியும் இல்லாமல் போகும்
கட்டிளமையில் கவர்ச்சியோடு புகைக்கிறார் ஏராளம்
அண்மையில் இருப்பவருக்கும் உபாதைகள் தாராளம்
சிறுமகிழ்ச்சிக்காய் வாழ்வையே வைக்கிறார் பணயம்

தானுமழிந்தே
அழிக்கிறார் தரணியையும்
அந்தோ...
புகைமண்டலத்தின்
பிடியில் பூமி
உயிர்க்கொல்லியாய் மனிதக்கைகளில்
ஆறாம் விரல்!





## 46. இயற்கை

இறைவன் தந்த அழகிய இயற்கை
இன்புறக் கண்டு அடைந்திடு உவகை
உயர்ந்திடும் மலைகளில் மேகம் சூழ
ஓடிடும் நீர்வீழ்ச்சி கொள்ளைக் கொள்ளும்
நதிக்கரைச் சூரியன் மறையும் போதும்
நாதமாய்த் தென்றல் வீசும் போதும்
நாடியே மனம் தேடுது இயற்கை
நலமாய் எம்மைத் தருமே வாழ்க்கை
பச்சை இலைகள் துளிர்க்கும் போதும்
பறக்கும் பறவைகள் இசைக்கும் போதும்
சூரியக் கதிர்கள் சோம்பல் உடைத்துச்
சோதியாய் சேதி சொல்லுது இயற்கை

## 47. உழைப்பே உயர்வு - தன்முனைக் கவிதைகள்

மரகத முத்துக்கள்
மணிமணியாய் உருவாகின்றன
உழைப்பாளர் உடம்பில்
வியர்வைத் துளிகள்


வீழும் கண்ணீர்த் துளிகள்
வியர்வையோடு கலக்கின்றன
தினக்கூலிக்காரன் கையில்
விழும் நாட்சம்பளம்

செய்யும் பணியோ
பிழையின்றிப் பூரணமாகிறது
பரிதாபமாய்ப் பாதியில்
உழைப்பாளர் வாழ்வு

ஓயாமல் ஒழியாமல்
ஓடி ஓடி உழைக்கிறான்
எப்போது ஓய்வு
உழைக்கும் கைகளுக்கு

கடுமையான உழைப்பில்
காய்த்துப் போகின்றன கைகள்
புகழ் மாலைகள் விழுகின்றன
இடைவர்த்தகர் தோள்களில்





## 48. மாம்பழக் குருவி

மஞ்சட் குருவி
மாம்பழக் குருவி

கொஞ்சிடத் தழுவி
துடிக்கிறேன் உருகி

மடியில் தவழும் அருவி
மாதுளங் கன்னங்களழகி

செங்கரும்புக் குழவி
சிந்தும் புன்னகைக் குமிழி

வளர்பிறை எழிலி
வண்ணமயில்க் குழலி

மதிமுக அழகில் மயங்கி
மந்திர விழியில் கிறங்கி

கன்னக்குழியில் தவறி
கனவுலகிலும் அவளே முகிழி

அங்கமெங்கும் மெதுமை பூசி
அமுதம் உண்ணும் அழகோ நீ

கொஞ்சும் மழலையின் பைங்கிளி
கோலத் திருவுடலுன் மேனி


நெஞ்சம் நிறைக்கும் நிம்மதி
விஞ்சும் பொன்னிறப் பரிதி


தஞ்சம் உன்னிடம் வானதி
நீயடி எந்தன் மேதினி

ஆனந்தம் நீயடி
எந்தன் மெல்லியல் மருகி

ஆயிரம் பொன்னகை
தோற்குமடி

உன் குறுநகை
ஒளியில் உருகி






# 49. என் நெஞ்சுக்குள் நுழைந்து விட்டாய்


என் நெஞ்சுக்குள்
நுழைந்து விட்டாய்
இலட்சம் கனவுகளை
விதைத்து விட்டாய்
வெண்பஞ்சாக இமைகளைத்
வருடி விட்டாய்
தீஞ்சுவையாகத் தேனை
எண்ணத்தில் ஊறவிட்டாய்

பஞ்சமே வார்த்தையில்
மௌனமே ஆட்சியில்
தஞ்சமே தோகையில்
தாகமே இதழ்களில்
பூக்களும் மலர்ந்ததே
புன்னகை பூத்திட
தென்றலும் நிசப்தமாய்
தேவியின் நினைவிலே
நிலவும் நாணியே
மேகத்தில் மறைந்திட
நயந்தே காதலைப்
பகிர்ந்திடும் உறவே

## 50. மாபெரும் சக்தி

அன்பே அகிலத்தின் தலையாய ஆரம்பம்
அனைத்தும் அதற்கே சிரம் வணங்கும்
உயிர்க் குலத்தின் வளர்ச்சிக்கு ஊற்று
உந்து சக்தியென உலகம் போற்றும்
இறைவன் அளித்த மகத்தான வரமே
இம்மியும் மாசிலா இன்பத்தின் சரமே
இயற்கையாக அமைந்த இறைவன் நியதி
இணையத்தில் கிடைக்காத இன்பத்தின் தொகுதி
மானுடம் வளர்க்கும் மாபெரும் சக்தி
மனதில் மாற்றங்கள் தருவிக்கும் யுத்தி
உண்மையான வலிமை அன்பினால் மட்டுமே
அஃதில்லையேல் மானுடம் வாழ்தல் அரிதே
காசினியில் முதுகெலும்பாய்த் தொழிற்படும் கருவி
கதிரின் வழியே வெளிப்படும் ஒளிரி
உலகில் வாழும் உயிரின் ஆயுதம்
பரந்த மனதினில் நிறைந்திடும் அமுதம்
அறம் பேணிடும் புனித வழியே
அன்பிலா மனிதனின் வாழ்வு பாழே
அகிலத்தின் அழகான பாதுகாப்புக் கவசம்
மகிழவே பெறுவோம் நேசத்தைக் கைவசம்
உண்மையான வலிமை தந்திடும் மாண்பு
ஆதலால் மாந்தரே செய்வீர் அன்பு





## 51. தீண்டும் கனவுகள்

கனவுகள் கண்டும்
செயற்படுத்த முடியாமல்
கண்ணீரோடு உரையாடும்
கலைஞன் வாழ்வு
கற்றுத் தேறிக்
கலைகள் பல
கண்ட பின்பும்
மேடையேறாமல்
முடங்கிக் கிடக்கும்
ஆக்கங்கள் அனைத்தும்
என்றோ ஒருநாள்
ஓடம் ஏறி
எண்ணிலா வெற்றிகள்
கொண்டு வரும்
ஏக்கத்தோடு நீ
நினைத்த எதிர்காலம்
நன்றே உனை
நோக்கி நகரும்
காலம் வெகுதூரத்தில்
இல்லை கவிஞனே
தீராக் காதல்
கொண்டுன்னை
திரும்பத் திரும்பத்
தீண்டும் கனவுகள்

## 52. மகாத்மா காந்தி


மகாத்மா... மகிமை பொருந்திய
ஆத்மா–நீங்கள்!
விடுதலை வேட்கை கொண்டு
வீறுநடை போட்ட மகான்–நீங்கள்!


உப்புச்சத்தியாக்கிரகமும்
உண்ணாவிரதப் போராட்டமும்
நடத்திய உத்தமர்–நீங்கள்!

ஆயுதமேந்திய
ஆங்கிலேயரை–எதிர்த்து
அறவழிப்போராட்டம் நடத்திய
அண்ணலர்–நீங்கள்!

புத்திலிபாய்க்குப் பிறந்த
புத்திசாலி நீங்கள்...
பொல்லூன்றிய
புரட்சியாளர்–நீங்கள்!

மேலமாசியில்–ஏழைகளுக்காய்
மேலாடை துறந்தீரே – ஏழை
மக்களுக்கு–முழு ஆடை
வேண்டும் என்று சூளுரைத்தீரே





ஆயுள் முழுவதும்
அறப்பணிக்காய் அர்ப்பணித்தீரே
அகிம்சைக்கோர் அர்த்தம் தந்தீரே

காந்தி–உங்களால்தான்
இந்தியா அடைந்தது
சுதந்திரச்சாந்தி

வெள்ளையரை விரட்டி
விழுமியங்கள் காத்தீர்
விடுதலை பெற்றுத்தர
வீரச்சபதம் எடுத்தீர்


விழிப்புணர்வைத் தூண்டிய
மாபெரும் வீரரே
கலாச்சாரம் காத்த
கண்ணியரே


கைத்தறி கொண்டு
கதர் நெய்து
பிரித்தானியர்க்கொரு
புதிர் போட்டீரே

விடுதலைக்காய்
உயிரைத் துறந்த
தியாகச்செம்மலே
பூமியில் அதனால்
கறைபடியாத
காவியமானீரே

உலகமுள்ளவரை
அழியாது உங்கள்
உண்மை வரலாறு...

உங்கள் வீரச்சுவடுகள்
எழுதிடக்காணாது
இவ்வேடு...





## 53. பொதிகைப் புனலாய்ப் பொங்கும் தமிழே

பொதிகைப் புனலாய்ப் பொங்கும் தமிழே
புதுமை அழகாய்த் துலங்கும் ஒளியே

பெருமை குன்றா வற்றா நதியே
அருமை அமுதாய் சுவையின் பொதியே

பேசும் இனிமை வளமை மொழியே
வீசும் புகழின் உச்சம் தொட்டாயே

கோடிக் கணக்கானவர் பேசும் மொழியே
குமரிக் கண்டம் பிறந்தாய் நீயே

தொன்மைத் தன்மை தன்னகம் கொண்டாயே
தொல்காப்பியம் எமக்கு உவந்து தந்தாயே

பண்பாடு பட்டறிவு பொதிந்த மொழியே
பிறமொழிக் கலப்பு இல்லாத் தூயதமிழே

இன்பம் கொழிக்கும் இனிய செம்மொழியே
எல்லா மொழிக்கும் தலையாய தாயே

கலை இலக்கியம் வளர்த்த கீர்த்தியே
கண்மணி போலக் காப்போம் உன்னையே

## 54. மனித நேயம் போற்றுவோம்


மாண்புறு உலகினிலே மானிடராய்ப் பிறந்து
இளகிய இதயமும் இரக்க சுபாவமும்
உறுதியான செயல்பாடும் உன்னத வார்த்தைகளும்
உள்ளத்தை வளமாக்கி மனிதநேயம் காத்திடுமே
ஆறுதல் தந்து அன்பைப் பெருக்கிடுமே

இன்னல் களைவதும் இனிதே ஓம்புவதும்
துன்பம் தராது துணையாய் நிற்பதும்
அன்பின் வழியதுவாம்
அந்நியோன்யம் வளர்ப்பதுவாம்
அறவழி போதித்து மனிதநேயம் விதைப்பதுவாம்


கண்ணில் கசியும் ஈரம் துடைத்து
வயிற்றுப் பசிக்கு ஈகையோடுவந்து
ஏழையின் வாழ்வு எளிதாய்ச் சிறக்க
ஏற்றிடுவோம் எழிலாய்க் கருணை தீபம்

தலைகோதும் அன்பில் நெகிழ்ந்து
தரணி நிறையட்டும் தயவான சேவகத்தில்!
உன் தாகம் தணிக்கும்
நேசத்தில் பணிந்து
சோகம் தொலையட்டும் அன்புச்சோதியில் ஒளிர்ந்து!

நனிக் கீர்த்தியோடு
நறுஞ்ஞாலம் போற்றிட
மனிதநேயம் காத்திடு
மனிதனாக வாழ்ந்திடு



## 55. இயற்கை



இயற்கை எழிலில்
இரசனை கொள்வோம்
இன்பமுடன் வாழவே
வளங்கள் பெறுவோம்
சலசலக்கும் அருவி
இசைக்கும் குருவி
பச்சைக் காடு
பாய்ந்திடும் மான்குட்டி
பார்க்கவே உள்ளம்
பரவசம் அடையுமே
பறவை போலே
சிறகுகள் விரிக்குமே
சுத்தமான காற்றைச்
சுவாசித்துச் சுகதேகியாவோம்
சத்தான பழங்களைப் பெற்றுடனே சாப்பிடுவோம்
மாந்தர் எம்மினம்
அழிந்திடாது வாழ்ந்திட
மாசடையாமல் காப்போம்
மாண்புறு இயற்கையை

## 56. செந்தமிழ்த் தேன் மொழியாள்

இனிக்கும் செந்தமிழ்த் தேன் மொழியாள்
இலங்கிடும் பொன் வதன எழிலாள்

மின்னிடும் பல்வரிசை ஒளியின் கிரீடம்
கன்னியின் கழுத்தோ சங்கினை ஒத்திடும்


மல்லிகைச் சரமாய் மலர்ந்த தேவதை
மெல்லிடை நாணிட வளைந்திடும் பூங்கோதை


கண்களில் காதலைத் தெளிக்கிறாள் தூவி
காந்தமாய் இழுத்தே கவர்கிறாள் தோழி

கார்குழல் அழகோ கவிதை வரிகளாய்
கன்னங்கள் மலர்ந்தன கமலங்களாய் மாறி

அணிந்த மாலையோ அழகில் சொக்குதே
காதினில் சிமிக்கியோ கிண்கிணி ஆகுதே

வாடி சுந்தரி வனப்பின் காதலி
நாடியே வருகிறேன் நாதமாய்த் தேடி





## 57. புத்தாண்டு பிறக்கட்டும்

புத்தாண்டு பாரினிலே புதிதாகப் பிறக்கட்டும்
புன்னகையோ இதழ்களிலே இனிதாக மலரட்டும்

புதுநாதம் எங்கும் சுகமாக இசைக்கட்டும்
புத்தொளி பொங்கி உலகத்தில் பரவட்டும்

புத்தாடை அணிந்தே புளகாங்கிதம் அடையட்டும்
பூட்டிய கதவுகள் இனிமேல் திறக்கட்டும்

பூரிப்போ நெஞ்சம் எல்லாம் நிறையட்டும்
புதுமைகள் பாரினிலே நல்வரவு ஆகட்டும்

பூமியில் மலர்கள் பூத்துக் குலுங்கட்டும்
புரையோடும் நோய்கள் புதைந்தே போகட்டும்

பாவங்கள் எல்லாம் கரைந்தே ஓடட்டும்
பாரினில் கொள்ளை இன்பம் தளைக்கட்டும்

## 58. இளமையும் முதுமையும்

இறைவன் தந்த இளமைப் பருவம்
இன்பமாய்க் கழியுது பொழுதுகள் யாவும்

களையான முகம் கட்டிளம் வாலிபம்
துள்ளிக் குதித்திடும் துடிப்பான யௌவனம்


எதுவும் நடக்குது எல்லாமே இயலுது
காலம் கதியில் கடந்து போகவே


கட்டுடல் மேனியோ களையை இழக்குது
பட்டு வாயும் பொக்கை விழுகுது

பொன்னான சருமம் பொலிவினை இழக்குது
கட்புலன் கூர்மையோ கடுமையாய்க் குறையுது

பற்கள் எல்லாம் படிப்படியாய் விழுகுது
கட்டிய கூந்தலில் முடிகள் பழுக்குது

சட்டென்று வயது ஓடியே போகுது
இளமையும் கழிந்தே முதுமையும் வருகுது





## 59. என்னைக் காதலி எந்தன் காதலி

என்னைக் காதலி எந்தன் காதலி
சின்னக் கண்மணி சிந்தும் பொன்மணி

கன்னச் சிவப்பினில் கருக்கலும் தெரியுதே
வண்ணப் பூங்கொடி வாராய் அருகினில்

கற்றைக் குழலால் கட்டி இழுத்தாய்
நெற்றிப் பிறையிலே சிறைப் பிடித்தாய்


கட்டிய ஆடையோ நாணியே போகுதே
காந்தள் பார்வையில் சொர்க்கம் தெரியுதே


கண்கள் இரண்டும் பட்டாம்பூச்சி ஆனதோ
காதல் சொல்லவே சிறகுகள் அடிக்குதோ

உன்னை நீங்கினால் நானும் இல்லையே
உயிரோடு உயிராகக் கலந்தாய் தேவதையே

# 60. ஞானமே துணை

நல்லறிவும் நற்பண்பும் நயந்திடும் உலகு
நானிலம் போற்றிடும்
வாழ்வின் அழகு
பழுத்த மரமாய்ப்
பயனுடை வளமே
அறிவுடையார் ஆற்றல் பிறர்க்குப் பலனே
தெளிந்த அறிவும்
துல்லிய சிந்தனையும்
பெரும் ஆற்றல்
பேறாய் வாய்த்திடும்
பகையும் பேதமையும்
பிரித்து அறிந்து
பெருமை சேர்த்திடும்
செல்வமே ஞானமாம்





## 61. ஆழிப்பேரலை

ஆழிப்பேரலை
அழிவைத் தந்த பேரலை
அனேக உயிர்களைக் கொன்ற பேரலை
அன்புறவுகளைத் தின்ற பேரலை

கடலின் அடியில் நடுக்கமோ?
கரையைத் தாண்டிய சேதமோ?
நடுக்கத்தால் கடலில் வந்த திடுக்கமோ?
மாபெரும் விசையின் ஆட்டமோ?


கோர வாய் திறந்த நீரின் ராட்சசனோ?
சூறையாடும் வேக உந்துதலின் தாக்கமோ?
ஆயிரம் அலைகளின் சேர்க்கையோ?
ஆத்திரமடைந்த கடலின் சூழ்ச்சியோ?


எத்தனை ஆயிரம் சொந்தங்கள்
இழந்து தவிக்கும் பந்தங்கள்
மாண்டவர் மீண்டு வந்திடுவாரோ?
மனதளவில் உருவாகின காயங்கள்!

சந்ததி அறுந்து சந்திக்கு வந்ததே
நொந்து நிர்க்கதியாகி நூலென ஆனதே
நாதியற்று நரகமென வாழ்க்கை.
நாள்தோறும் வாட்டுது எண்ணங்களின் சேர்க்கை.

ஆண்டுகள் போனாலும் ஆறாத ரணங்கள்
சுனாமி என்று சொன்னாலே உள்ளூர அச்சங்கள்
யுகமுடிவோ என்று தோன்றிய நேரங்கள்
மனதின் ஆழத்தில் பதிந்துவிட்ட பரிதாபங்கள்

பேரிடியாய் வந்துவிட்ட பேரிடர்கள்
பாரினிலே பயப்படுத்தும் பாதகங்கள்
போதும் இறைவா இந்தச் சோதனைகள்
பொறுத்தருள்வாய் மனிதரின் துன்பங்கள்





## 62. பூக்காரப் புள்ள

பூவிற்கும் பூக்காரி நடந்து வாரா
புன்னகையைப் பொன்னகையாய் அணிந்து வாரா

பூ ஒன்று பூக்கூடை சுமந்ததம்மா
பூங்கைகளோ பூச்சுமந்து நோகுமம்மா


சிவப்பு ரவிக்கையோட சிலிர்ப்பா வார புள்ள
சிட்டு உன் பூவெல்லாம் சிறப்பாக விக்கும் புள்ளே


மாலையாக நான் தொடுத்து மாட்டிடவோ உன் தோளில்
மணவறைச் சோடனைக்குத் தூவிடவோ ரோசாக்கள்?

செம்பூவே என் காதலத்தான் ஏற்பாயா?
செவ்வாய் திறந்து பதிலத்தான் சொல்வாயா?

## 63. தரணியில் பெருமை வேண்டும்

தொட்டதெல்லாம் அழகாய்த் துலங்கவே
திட்டம் நிறையப் போட்டு வென்றிடு
திண்ணமாய்த் தடங்கள் உலகில் பதிக்கவே
தீர்க்கமாய் முடிவுகள் திறம்பட எடுத்திடு
தன்னம்பிக்கையோடு தனியாய்க் களம் இறங்கியே
தடைகளை உடைத்துத் தாவிப் பாய்ந்திடு
துணிவே உந்தன் துணையாக வந்திடத்
தன்னிகரில்லா வெற்றிகள் வரமாய்ப் பெற்றிடு
துன்பங்கள் துடைத்து நன்றாய் வாழ்ந்திடவே
தக்கதாய்க் கல்வி தரமாய்க் கற்றிடு
கல்வியே சிறந்தது உலகினில் உய்த்திட
கடுகு சிறிதானாலும் காரம் பெரிது ஆகவே
கடுமையாய்க் கற்று காத்திரமாய் வென்றிடு
காலத்தை வென்று சாதனை படைத்திடு
திருமுயற்சி எடுத்துத் தீபமாய் ஒளிர்ந்திடு
தரணியில் பெருமைப் பெரிதாய்ப் பெற்றிடு





## 64. பூதாகார வலை

புறா விடுதூதும் ஒற்றர் படையும்
தோதாகினவே சேதி சொல்ல
பறை ஒலித்தும் தீ மூட்டியும்
பயனடைந்தானே ஆதிக்குடி

இராட்சத சிலந்தி பற்றிப் படர்கிறது
மூலைமுடுக்கெல்லாம் வலை பின்னி
பாசவலையோ நாசவலையோ
பூதாகாரமாகி வாழ்வை விட்டும்
அகலாத அங்கமாய்

கற்காலந்தொட்டு அஞ்சலாய்த்
தொலைபேசியாய் உச்சந் தொட்டு
அசாத்திய முன்னேற்றத்தில்
அடிகள் வைக்கும் எண்மின் உலகம்

புலனமாம் ,முகப்புத்தகமாம்
படவரியாம் ,பற்றியமாம்
எனப் பரிணாம வளர்ச்சியோ
படுகதியிலே கிடுகிடுவென

உலகத்தைச் சுருக்கி
உள்ளங்கையில் தந்தது
கருத்துப் பரிமாற்றமோ
கண்டங்கள் தாண்டிப் பறக்குது


தூர நாடுகளோ அயல் வீடாய் ஆனது
அறிவுக்களஞ்சியமோ அருவியாகப் பொழியுது
ஆக்கங்களுக்கான அங்கீகாரமும்
திறமைக்கான களமும் வீரியமிக்க பயன்பாடே
விரல் நுனியில் உலகத்தின் அசைவே


ஆயினும் பொன்னான காலத்தை
மண்ணாக்கும் இளவல்கள்
கனவுகளைக் கசக்கித்
தூர எறிகின்ற பரிதாபங்கள்

இயற்கையை ரசிக்கவும்
இன்பமாய் விளையாடவும்
மறந்து போன சிறார்கள்
இணையத்தில் அடிமையாகிப்
போகின்ற அவலங்கள்

வலைக்குள் வீழ்ந்துவிட்ட
நம் எதிர்காலத் தூண்கள்
தலை குனிந்தே
தலைகுனியும் கூட்டமானது
கொடுமையிலும் கொடுமையே

விஸ்வரூபமாய் உருவெடுத்து
வியாபிக்கின்ற வலைத்தளங்கள்
நட்பை வளர்க்குது நாடகமும் ஆடுது
நேரத்தை எல்லாம் கோரமாக விழுங்குது







மனதளவில் தாக்கங்களும்
உடலளவில் நோய்களும்
ஆன பலாபலனாய்
அதிர்ச்சியின் உச்சமே
உணர்வுகளைக் களவாடியும்
உறவுப் பிணைப்பைச் சூறையாடியும்
வளர்ந்துவிட்ட ஆறாம் விரலாய்ச்
சமூக ஊடகங்கள்
சாபமென்றுப் பேசு பொருளாய்
ஆனதே இந்தப் பாதக ஓடங்கள்

# 65. போதை வேண்டாம்

போதை வேண்டாம்
வாதையில் விழுவாய்!
பாதை மாறியே
பயணம் செய்வாய்!
அடிமை ஆக்கும்
ஆளைக் கொல்லும்!
அவனியில் சீர்கேடோ
மலிந்து போகும்!
இருட்டுக்குள் முடங்கும்
இளவல்கள் வாழ்க்கை!
எதிர்காலம் இழந்து
கேள்விக்குறியாகும் குடும்பம்!
வீட்டிற்கும் நாட்டிற்கும்
கேடாம் போதை!
விரைந்து ஒழிக்கவே
முனைவது கடப்பாடு!







# 66. பொன்னி வண்டு

பொன்னி வண்டே பொன்னி வண்டே...
மின்னி மின்னி இரவில் போகும் மாயம் என்ன?
வண்ணமெல்லாம் குழைந்தெடுத்துன்
மேனி பூசிவிட்ட கோலம் என்ன?
நின்னைக் காணுகையில்
நினைவெல்லாம்
பின்னோக்கி ஓடுகிறதே...
பிள்ளைப் பருவத்திலே
விளையாடும் காலத்திலே
சோடிப் பொன்னிவண்டு
மாமா பிடித்துத் தர
ஆசையோடு நானும்
வளர்த்து வந்தேன்.
கண்ணாடிப் போத்தலிலே
கருணையோடு உனை வைத்து
அழகு பார்த்தேன்
தோழிமார்க்கும் உனைக் காட்டி
பெருமைக் கொண்டேன்
உண்ண உணவாக இலை தந்தேன்...
சித்திரம் போலிருக்கும்
நீ கடித்த மீதி இலை
அதை ரசித்தேன்...
முட்டையிட்டு அடைகாத்ததை
முந்திக்கொண்டே பார்வையிட்டேன்...
பார்க்கப் பார்க்க ஆசை வரும்...
கைகளில் ஏந்திடவே எண்ணம் வரும்...

பொன்னாம் பூச்சி நீயும்
எங்கேதான் போனாயோ?
இயற்கையோடு சேர்ந்து
ஒன்றித்து வாழ்கிறாயோ?
காலத்தின் சுவட்டினிலே
காத்திரமாய் நெஞ்சினிலே
உன் நினைவு!
கட்டடங்கள் கூடிவிட
காடுகளும் அழிந்துவிட
ஒழிந்தே நீயும்
எங்கே தான் போனாயோ?
கையிலே தவழ்ந்திடவும்
தடவி நான் பார்த்திடவும்
இயற்கையின் மினுமினுப்பே
பச்சைப் பளபளப்பே
பறந்து நீயும்
எங்கேதான் போனாயோ?







## 67. நீயும் நானும்

வெள்ளிச்சரடு நான்
வெண்கழுத்து நீ!
நீலவானம் நான்
வெண்ணிலவு நீ!
வைகறை நான்
விடிவெள்ளி நீ!
காதல் நான்
இதயம் நீ!
காற்று நான்
சுவாசம் நீ!
ஏழை நான்–என்
செல்வம் நீ!
சாலை நான்–வீசும்
சாரல் நீ!
பருவம் நான்–என்
வசந்தம் நீ!
நாடி நான்–என்
துடிப்பு நீ!
உயிர் நான்
ஆத்மா நீ!
உறக்கம் நான்–என்
சொப்பனம் நீ!
காலம் நான்–ஒவ்வொரு
நாழிகையும் நீ!
காடு நான்–எனக்குள்
கூடு கட்டிய பறவை நீ!

சுவர் நான்–என்
சித்திரம் நீ!
பழம் நான்
பஞ்சவர்ணக்கிளி நீ!
பெட்டகம் நான்–என்
பொக்கிஷம் நீ!
மேடை நான்
கவிதை நீ!
மோகம் நான்–என்
ஊடல் நீ!
திக்கற்றவன் நான்–என்
திசைகாட்டி நீ!
பூமி நான்–என்
பொறுமை நீ!
புத்தகம் நான்
பொருள் நீ!
வீடு நான்–ஒளி
விளக்கு நீ!






## 68. **புன்னகை பூக்கும் புதிய மலரே, மகளே**


புத்தம் புதிதாய் உலகிலே பிறந்தாய்
நெஞ்சத்தின் மருந்தாய் நேசமாய் வந்தாய்
தங்கமே உந்தன் தாள்களும் மென்மையே
ஏக்கங்கள் துடைக்க வசந்தமாய் மலர்ந்தாயே
புன்னகை பூக்கும் புதிய மலரே
பூவிதழ் அசைவில் புளகாங்கிதம் தந்தாயே
கன்னக்கதுப்பினைக் கையால் கிள்ளவே தோன்றுமே
கபடமில்லா முகத்திலே முத்தமிட வேண்டுமே
அன்போ உன்னால் ஊற்றாக உருவாகுதே
ஆறுதல் தரவே பூலோகம் வந்தாயே

## 69. மதிப்பு

வாழ்க்கைச் சக்கரம் உருண்டு செல்கையிலே
பணம், பதவி, பட்டம் மாத்திரமே
பாங்காய் உனது மதிப்பைத் தீர்மானிக்கும்
இழைத்து ஏழையாகி எல்லாம் இழந்து
நாதியற்று நீ தவிக்கையிலே உண்மையாக
யாரும் வாரார் உனக்கு உதவிடவே

நன்றாய் உணர்வாய் ஞாலத்தின் நாடகங்கள்
மேடையின் முடிவினிலே வருவார் வீணிலே
உயிர் போன பின்னே தேவையோ
இவர்களின் உயிரற்ற வாழ்த்துரைகள்
மனம் உவந்து ஐந்தறிவு செய்கிறதே
மனிதனுக்குத் தேவையான மகத்தான பணிவிடைகள்
எவரையும் உலகில் நம்பாதே
ஏமாந்த பின் துவண்டு வெம்பாதே





# 70. மணமாகா மங்கை

பெண் என்பவள் பிறப்பது பாவமோ?
பாதை நெடுகிலும் முட்களின் கோலமோ
துணையாக வாழ்வில் வருபவர் எவரோ?
தனிமையோடு கைகோர்க்கும் தலையெழுத்து
இவளுக்கோ?
மூச்சுக்காற்றில் வெப்பம் கூடுகிறது
ஏக்கத்தின் கொதிப்பில் மேனி மெலிகிறது
இரவின் நீளம் நிலவோடு போகிறது
அகவையோ ஒவ்வொன்றாய்க் கடந்து செல்கிறது
அவலம் தொடர்கிறது, பட்டியலும் நீள்கிறது
நாளும் நடக்கும் அநீதி கொல்கிறது
அலட்சியம் செய்யும் ஆணின் வர்க்கம்
முகலட்சணம் தேடி அலையும் கூட்டம்
உள்ளத்தின் அழகு உண்மையில் அறியார்
தம்பட்டம் அடித்தே தட்சணை கோருகிறார்
பூமித்தாயிடம் கையேந்தும் கொடியோர்
உலகினில் உய்வதற்கு இறைவனும் விடுவானோ
உதவாமல் அவனும் கைவிட்டு விடுவானோ?
இறைதர்மம் விலக்கியே கையூட்டுத் தேடலாமோ?
பூமியில் வாழும் தேவதைகள் இவர்கள்
சம்பளமின்றிச் சந்ததி வளர்க்கும்
சேவகிகள்
வேதனையின் கனம் தாழாமல் தவிக்கின்ற
முதிர்கன்னி இவள் முழுமையாவது எப்போது?

## 71. புதுநெறி தந்த புலவர் பாரதி


பாரத விடுதலைக்காய்ப்
பா...ரதம் ஏறி வந்த பாரதி...
கவிக்கானகத்தில் பிறந்த புல்லாங்குழல்...
பாரதி...யார்(?) பார் போற்றும்
பா...யாழ்...


வெள்ளையனே வெளியேறு என்று
வெறி கொண்ட வேங்கையாய்ப் பாய்ந்தவர்...
தன் கவிப்புலமை கொண்டு
சின்னஞ்சிறார்களோடு
கொஞ்சிக் குலாவியவர்...

சுட்டெரிக்கும் சூரியனாய்
தீண்டாமையைச் சாடியவர்...
கனல் தெறிக்கும் கவிதைகளால்
விடுதலைப் போர் புரிந்தவர்...

பாட்டுத்தீ கொண்டு
சுதந்திர உணர்வைக்
காட்டுத்தீயெனப் பரவச்செய்த
மீசைக்கவிஞன்...

புரட்சித்தமிழால் தேசிய
எழுச்சியூட்டிய முண்டாசுக் கவிஞன்...
எட்டயபுரத்தின் இலக்கியச் சொத்து...
இளம் வயதிலேயே புனைந்தார் – கவிதைக்கொத்து





சுப்ரமணியர்–அவர்
ஒரு சுதந்திரப்பிரியர்...
தேசிய கவி–அவர் ஒரு
தேன் சிந்தும் கவி...

தமிழ்ப்பற்றாளன்...
இவர் தமிழில்
கட்டுண்டோர்
பட்டாளம்...


சொற்சிலம்பம் கொண்டு
தமிழரை ஆட்டுவித்தவர்...
சாகசத்தமிழ்வாளால்
வீறுகொண்டெழுந்த
விடுதலைப் புயல்...


பொங்கும் தமிழின்
புரட்சி வீரன்–பாட்டிலே
புதுமைகள் புகுத்திய–அசகாய சூரன்...

சொற்கள் கொண்டு
பாக்கள் தந்தவர்...
பா...க்கள் தந்து
போதை செய்தவர்...

மகாகவி என்றால்
போதாது
உமைப்போற்றிட
வார்த்தைகள்
அகராதியில்
இனியேது...

மக்கள் கவி
மானுடம் பாட வந்த
மகாகவி
புதுநெறி தந்த
புரட்சிப் புலவர்...
எழுத்தாலும் கருத்தாலும்
தமிழர் நெஞ்சிலே
நீடூழி வாழ்பவர்...
காலத்தாலழியாக்
கவிதைகளால்
நித்தியமானவர்...






# 72. வலிகள் தாங்கும் ஆண் தேவதை


வாழ்க்கைச் சக்கரம் நன்றாய்ச் சுழலவே
ஓயாமல் சுழலும் அன்புச் சக்கரம்
வலிகள், வேதனைகள் தோள்களில் தாங்கியே
ஆறுதல் கூறிடும் ஆண் தேவதை
அத்தனைக் கஷ்டங்களும் தனக்குள் புதைத்தே
ஆனை பலம் தந்திடும் பலவான்
அடித்தளமாய்க் குடும்பத்தைத் தாங்கிப் பிடித்தே
தைரியம் தந்திடும் அன்பின் உறைவிடம்
ஆயிரம் ஆசான்களின் அறிவுரைக்கொப்பானவர்
அனுபவப் பாடங்கள் வழிகாட்டியே போதிப்பவர்
பாலர்வகுப்பு முதல் கலாசாலை சேர்க்கும்வரை
கால் கடுக்கக் காத்திருக்கும் கனவான்
கண்டிப்புக் கண்டிப்பாகக் கடுமையாய் இருந்தாலும்
ஆழமான நேசத்தோடு ஆலவிருட்சமென இருப்பவர்
அவரின் சொல்லே மூலமந்திரம்
அவரே எமக்கு மாதிரி நாயகன்
அன்பாய்க் கரங்கள் பிடித்து நடக்கையிலே
அனைத்துக் கவலையும் மறந்து போகும்
தம் வியர்வைத் துளிகளை உரமாக்கி
தனயன் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணிப்புவர்
நரைமுடியிலே வரலாறு பல குடிகொண்டவர்
பாத வெடிப்பினிலே பலநூறு
வெற்றிகள் சேர்ப்பவர்

தன்னம்பிக்கையின் ஊற்று அவரே
கண்கலங்க வைக்கும் நினைவுகள் தந்தவரே
என்ன கைம்மாறு செய்வோம்?
எந்தை மனம் குளிர?

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
தரணியில் அவரை மிஞ்சும்
வீரன் இல்லை

அவர்தாம்
வலிகள் தாங்கும் ஆண்தேவதை...





## 73. நாடு முன்னேறும்

நாடு முன்னேறும்
மாணவர் கற்கையிலே
நலவுகள் உண்டாகும்
நம்பிக்கை வைக்கையிலே

கற்றதனைச் செயற்படுத்தக்
கனவுகள் மெய்ப்படுமே
காலவோட்டத்தில் வாழ்க்கை
கரையைத் தொட்டிடுமே

வானளாவ வெற்றிகள்
வளமாய் வந்திடுமே
வதையின் தேன் போல்
இனிமை தந்திடுமே


ஒன்று சேர்ந்திட
ஒற்றுமை வளர்ந்திடுமே
ஒருங்கிணைந்த அன்பு
உலகை வென்றிடுமே

எல்லாம் அறிந்திட
ஆற்றல் வளர்ந்திடுமே
அனுபவங்கள் சேர்ந்து
படிப்பினைகள் தந்திடுமே

நன்மைகள் செய்திட
நானிலம் வாழ்த்துமே
நாளைய சாதனைகள்
நந்தவனம் ஆக்குமே

கல்வி உச்சம் பெற
பொருளாதாரம் வளர்ந்திடுமே
சமுதாயம் முன்னேற
நாடு நலம் பெறுமே





## 74. நற்றமிழ் வாழ்க!

மனிதக் கண்டுபிடிப்பில்
மகத்தானதாம்–மொழிவளம்...
மொழியின்றி மனிதனில்லை
தமிழின்றித் தமிழனில்லை!

அமிழ்தினும் இனியதாம்
தமிழ் மொழி...
இளமையும் எழிலும்
குன்றாத் திருமொழியாம்!

மண்ணுலகின் முதன்மொழியாம்...
மண் தோன்றாக் காலத்து
மாண்பு மொழியாம்

இயல்பாகத் தோன்றிய
இயன் மொழியாம்...
ஒன்பது கோடி மக்களின்
தாய் மொழியாம்!

திராவிட மொழியின்
முதற்பிள்ளையாம்
“பிராமி” எழுத்து
தமிழின் முன்னோடியாம்!

இலகு மொழி, இன்னிசை மொழியாம்...
பழைமையெனினும்
இளமை மொழியாம்!

தனித்தியங்கும் தங்க மொழியாம்...
தமிழரிருக்கும் இடமெல்லாம்
மணக்கும் மொழியாம்!

புதுமைகள் பேணுகின்ற
பைந்தமிழாம்...
இலக்கண, இலக்கியங்கள்
சேர்ந்த தேன்தமிழாம்!

இயலிசை நாடகம் கொண்ட
முத்தமிழாம்...
முத்தமிழ் வளர்த்த மூத்த தமிழாம்!


அகத்தியம், ஐம்பெரும் காப்பியந்தந்த அழகுத்தமிழாம்...
திருக்குறளும், திருவாசகமும்
செதுக்கிய செந்தமிழாம்!

தமிழ் என்றால் ஓர் தனித்துவமே...
உயர்தனிச்செம்மொழி என்றால்
மிகையல்லவே!

மொழியை உயிராய் மதிப்பவர் தமிழராம்...
தமிழுக்கு உயிரையே கொடுப்பவரும் தமிழராம்!

மொழியின்றேல் பேச்சில்லை...
தமிழின்றேல் உயிர் மூச்சில்லை!
நற்றமிழ், நறுந்தமிழ் வாழ்க, வளர்கவே!
செந்தமிழ், தேன்தமிழ் துலங்குக, ஓங்குகவே...





## 75. துன்பத்தில் துணை வரும் தோழன்

வாழ்க்கை நாடக மேடை அறிவாயா
வாழ்ந்து பார்த்து அனுபவம் புரிவாயா
இன்பம், துன்பம் இரண்டும் இணைந்தே
இனிதாய்ப் பாடங்கள் கற்றுத் தந்திடும்
துயரம் வருகையில் துவண்டிட வேண்டாம்
மகிழ்ச்சி மலர்கையில் மமதை கூடாது
இடுக்கண் களையவே தக்க தருணத்தில்
தோள் கொடுத்து உதவுவான் தோழன்
தடுக்கி விழுகையில் கைகள் தந்து
தூக்கி விடும் தூய குணமுடையவன்
தரணியில் உள்ளார் நல்லோர் வரிசையில்
தன்னிகரில்லாச் சேவை செய்பவன் நண்பனே

## 76. அந்தாதிக் கவிதை

### அன்னை ஒரு ஆலயம்

அன்னை ஒரு
ஆலயம் ஆகிறாள்

ஆகிறாள் அகிலத்தில் அர்ப்பணிப்பின் சிகரமாய்

சிகரமாய் இல்லறம் இனிதாய் பேணுவாள்

பேணுவாள் பிள்ளைகளைக் கண்ணுங் கருத்துமாய்

கருத்தாய் வளர்த்தே ஊக்கந் தருவாள்


தருவாள் தரணியில் நிகரில்லாச் சேவை


சேவைகள் செய்தே சோதனைகள் தாங்குவாள்

தாங்கியே ஆகுவாள் அனுபவத்தில்  ஆசிரியை

ஆசிரியை அவளிடமே நாட்டின் எதிர்காலம்

எதிர்காலம் வளமாக வாழ்த்துவோம் அன்னையை





## 77. கல்யாண மாலை சூட வா

கல்யாண மாலை சூட வா
கவிதையே என்னோடு வாழ வா

கள்ளூறும் எண்ணத்திலே கனவுகள் காண்கிறேன்
மெல்லவே வானிலே நினைவோடு பறக்கிறேன்

சேலையோடு இலங்கும் எந்தன் சிற்பமே
மாலையோடு என்னையும் சூடிக் கொள்

பூப்போல மண்ணில் உன்னைத் தாங்குவேன்
புன்னகைகள் சேர்த்து மாலையாகக் கோர்ப்பேன்

மனதார இணையாக வந்தாயே மயிலே
துணையாகித் தருவாயே வசந்தங்கள் வாழ்விலே

## 78. காத்திருக்கிறேன்

காத்திருக்கிறேன் நானே கனவோடு பூத்திருக்கிறேனே

சேர்த்திருக்கிறேனே காதலைக் கோர்த்திருக்கிறேனே பூச்செண்டு

வேர்த்திருக்கிறேனே மூக்குநுனி
சேர்த்திருக்கிறேனே நினைவுகள்

பார்த்திருக்கிறேனே பாதை நோக்கியிருக்கிறேனே எந்நாளும்

கண்ணாளனே கவிதைக்கான கருத் தந்தவனே
கலையாதே அகலாதே
வந்துவிடு வாரியே அணைக்க


செந்தமிழும் மொழியும்போல சேர்ந்து இருக்கத்தான்
சீரும் சிறப்போடும்
வாழ்ந்து பார்க்கத்தான்


சோடிப்புறா ஒத்தையிலே நிக்குது சேவகனே
சோகத்தோடு கண்ணீர்
வடிக்குது தேவனே

கள்வனே கரும்பென இனிக்கும் மாயவனே
விட்டுப் போகாதே விடலையை நோகடிக்காதே

விடியலுக்காய் ஏங்கும் இரவாய் விம்முகிறேன்
விண்மதி தேடும் வானமாய் ஆகிறேன்

கதிரவனாய்ச் செங்கமலம் மலர்ந்திடவே வருவாயோ
கைப்பிடித்தே மலர் மாலையெனச் சேர்வாயோ






# 79. மரமே வாழ்வின் வரம்

மரமே வாழ்வின் மகத்தான வரம்
தரமாய்த் தரணியில் தந்ததே வளம்
காயும் கனியும் இலையும் பூவும்
பலவகைப் பயன்கள் பதமாய்த் தந்திடுமே
மண்ணில் வேரோடி அரிப்பைத் தடுக்குமே
நிலத்தடி நீரின் அளவைக் கூட்டிடுமே
உயிரான வாயு உயிர் வாழ்ந்திடத் தந்திடுமே
பூலோக உஷ்ணம் பூரணமாய்த் தடுத்திடுமே
இயற்கை அன்னை தந்த பசுமையை
இன்புற அனுபவித்தே உயிரெனக் காப்போம்

## 80. விழியே கதை எழுது

விழியே கதை நூறு எழுது
விண்ணின் மதியாகி ஒளி எழுது
இமையாலே சிறகடிக்கும் பறவை நீயோ
இருட்குழலாலே இழுக்கும் பாவையோ
கிளியே நீயே எந்தன் இணையடி
கீதமிசைக்கும் குயிலே துணையடி
புருவ வில்லாலே போர் புரிகிறாய்
கருவிழிப் பார்வையில் காதல் புனைகிறாய்
கள்வன் என்னைத் திருடிப் போகிறாய்
உள்ளம் அதிலே உயிரை நெய்கிறாய்
காரிகை அழகில் கட்டுண்டு கிடக்கிறேன்
தூரிகையால் உள்ளக் கிடக்கையை வடிக்கிறேன்


## 81. உறவாடும் உணர்வுகள்




உறவாடும் உணர்வுகள் உள்ளத்தை நிரப்புகிறதே
ஊஞ்சலாடி எண்ணத்திலே
இனிமை தருகிறதே
தீண்டும் காற்றின் முகவரி தேடுதே
தீட்சண்ய முகம் விம்பமாய் ஒளிருதே
மனதோடு மனம் பேசித் திளைக்குதே
மாலையின் கருக்கலில் மனம் வாடுதே
விழி மூடாமல் அவளையே நினைக்குதே
விடிய விடியக் கவிதை உதிக்குதே
நிலவின் ஒளியில் ஞாபகம் வருகுதே
நிம்மதி அடியோடு தொலைந்து போனதே
காதலிக் கைப்பிடிக்க நாளும் வருமோ
கலந்தே வாழ வேளையும் கூடுமோ
பாடல் வரிகளில் மனது லயித்திடுதே
பவித்திரமாய்ப் பல கதைகள் கூறுதே
உண்மைப் புரிதலில் உறவுகள் சேருதே
பிரிவின் வலியில் இரவுகள் நீளுதே

## 82. துளியும் தளராதே

துன்பம் வரும்போது சிரிக்கக் கற்றிடு
துயர் களைந்தே வாழப் பழகிடு
தனியே நின்று தரணியை வென்றிடு
தடைகளை உடைத்து முன்னேறிச் சென்றிடு
துளியும் தளராமல் ஒளியெனத் துலங்கிடு
தூலத்தை நோக்கியே துணிவாய்ப் பறந்திடு
திறமையாய்க் கல்வி தரமாய்க் கற்றிடு
தீபமாய் மண்ணில் ஒளிர்ந்தே வாழ்ந்திடு






## 83. வெளிச்சத்தை நோக்கிய பயணம்


கல்வி கற்று ஞானம் பெற்று
மாணவர் உலகினிலே மேதையாகிச் சிறக்க
அறிவார்ந்த நூல்கள் அவசியம் தேவை
செறிவான கற்கை தியாகத்துடன் தேவை
புத்தகக்கலம் ஏறிப் புறப்படு தங்காய்
வெளிச்சத்தை நோக்கிய புனிதப் பயணம்
யாகங்கள் செய்து யோகங்கள் பெற்றிடலாம்
யாத்திரை முடிவினிலே ஞாலம் போற்றிடுமே
சபதங்கள் வென்றிட வாழ்த்தொலிகள்
எதிரொலித்திடுமே உலகம் எங்கும்

## 84. மணக்கும் மீன்குழம்பு

மணக்கும் மீன்குழம்பு மண் சட்டியிலே
எனக்கும் ஊறுதே எச்சில் நாக்கினிலே
வெண்சோறு பொங்கித்தான் சமைச்சி வச்சிருக்கு
சத்தான சாப்பாடுதான் பன்பாயில் வச்சிருக்கு
சம்மணம் போட்டு ஒக்காந்து சாப்பிடணும்
சாதத்தை நல்லாப் பிசைய வேண்டும்
கருவேப்பிலை வாசம்தான் பசியக் கூட்டுதே
கறிக்குழம்பு கண்ணைத்தான் கவர்ந்திழுக்குதே
கடிச்சிச் சாப்பிட சிறு வெங்காயமும்
காரத்துக்கு நல்ல கறிமிளகாயும்
புளிச் சுவைக்கோ ஒரு கொறுக்காவும்
புதுச் சட்டியிலே பிராட்டி சமச்சிருக்கா
கையால் அள்ளிக் கவளமாச் சாப்பிடத்தான்
கமகமக்குமே கலயத்தில் கிராமத்துக் கலப்புணவு



## 85. சேற்றில் நின்று சோற்றைத் தருகிறார்



சகதியிலே எங்கள் வாழ்க்கை போகுது
சதாகாலமும் வெயிலிலே வேலை நடக்குது
சேற்றிலே நின்று சேவகம் செய்கிறோம்
சோற்றை உங்களுக்கு உணவாய்த் தந்திடவே
செய்யும் வேலைக்குத் தகுந்த கூலி
செவ்வனே எங்களுக்குக் கிடைப்பதே இல்லை
வாழ்க்கைத் தேவையும் முழுமை அடையவில்லை
வானத்தை நம்பி வாழும் ஏழைகள்
வாழ்வாதாரம் செழிக்க வழி இல்லை
வாயாலே உங்கள் புகழாரம் எதற்கு



“சிறகு முளைத்த மீன்” கவிதை நூலின் மூலம் இலக்கிய உலகில் பிரவேசிக்கின்ற ஹாஜியானி டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் மர்ஹூம் U.H.முஹம்மத் சித்தி பௌசியா தம்பதியின் மூன்றாவது பிள்ளையாக 1980 இல் பிறந்தார். மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக்கல்வியை மட்/அறபா வித்தியாலயத்திலும், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் வரை மட்/அல் முனீரா மகளிர் மகா வித்தியாலயத்திலும் பயின்றார். உயர்தரக் கல்வியை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்று வைத்தியத் துறைக்குத் தெரிவானார். களனிப் பல்கலைக்கழகத்தின் ராகமை மருத்துவப் பீடத்தில் மருத்துவப் படிப்பை முடித்தார். வைத்தியச் சேவையில் பதினைந்து வருடங்கள் அனுபவம் உள்ளவர். தேசிய இரத்தப் பரிமாற்றச் சேவையில் நான்கு வருடங்கள் பணியாற்றியுள்ளார். இவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்திய அதிகாரியாகத் தற்போது கடமை புரிகிறார். வைத்தியத்துறை மட்டுமல்லாது எழுத்துத் துறையிலும் இவரது ஆளுமை மேலோங்கி இருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அன்பு, அடக்கம், பணிவு, துணிவு என்பவை டாக்டர் ஜலீலாவின் அணிகலன்கள் ஆகும். சிறுவயதிலிருந்தே எழுத்திலும் வாசிப்பிலும் ஆர்வம் உள்ளவர். எல்லாத்துறைகளிலும் சிறக்க வழிகாட்டிய தனது தந்தையை நேசத்தோடு நினைவு கூர்ந்து பார்க்கிறார்.

அண்மைக்காலமாக இவரது எழுத்தின் பரிணமிப்பும் வளர்ச்சியும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் முகநூலிலும் காணக் கூடியதாக இருக்கிறது. சமூக சிந்தனையுள்ள தோழி டாக்டர் ஜலீலாவின் கவிதைகள் சமுதாயம் சார்ந்து நிற்கின்றன. ஒரு பொறுப்புமிக்க வைத்தியராக, குடும்பத் தலைவியாக, குடும்பத்தை நிர்வகிப்பவராக மட்டுமல்லாது எழுத்துத் துறையிலும் இவர் மிளிர்வது அதிசயமே.



முதலாவது நூல் என்றாலும் வளமான சிந்தனைகளோடு தரமான கவிதைகளை நமக்குத் தந்துள்ளார். நிச்சயம் இது வரவேற்பைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் பல நூல்களை இவர் மூலமாக இலக்கிய உலகம் காண வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையும் அவாவும்.

எஸ்.யூ.கமர்ஜான் பீவி (JP) Dip.in.Psychology.
ஹீரஸ்ஸபிட்டிய, வத்தளை.

எழிலினி பதிப்பகம்
15ஏ, முதல் மாடி, காசா மேஜர் சாலை
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி : 044 – 3819 3206, 4214 6084
ezhilinipathipagam@gmail.com
www.emeraldpublishers.com

Rs. 160/-